விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 201 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 23 சனிக்கிழமை (08.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## மருந்துகளின் தரம் தொடர்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)

மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், மருந்துகளின் தரம் உள்ளிட்டவற்றில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு துரிதமாக தீர்வு காண்பதற்காக விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு 15

# யாழ். - சென்னை கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை

## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே



(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் இடையிலான கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இந்திய சுற்றுலா சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரி 15

# முல்லை நீதிபதியின் செயல் பௌத்தத்துக்கு எதிரானது

## நீதித்துறையை சாடிய சரத் வீரசேகர

(கொழும்பு)

- இலங்கை சிங்கள பௌத்த நாடென்பதை முல்லைத்தீவு தமிழ் நீதிபதி மறந்து விடக் கூடாது.
- வடக்குக் கிழக்கிலுள்ள பௌத்த தொல்பொருளுக்கு எதிராக நீதிபதிகள் செயற்படுகின்றனர்.



பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வானூர்திமூலம் ஏற்றிச் செல்லல் (திருத்தச்) சட்ட மூலம் - இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற் 02

### ஒன்றரை இலட்சம் பேர்

## நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரை 150,000 இற்கு மேற்பட்ட இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைக்காக சென்றுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளியேறியவர்களில் பெரும்பாலா 15

## மருதங்கேணி கடலில் மூழ்கி சிறுவன் மரணம்

(கரணவாய்)


வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கடற்பரப்பில் குளிக்கச் சென்ற சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் லண்டனில் இருந்து வருகை தந்தவரும் மருதங்கேணியைச் சேர்ந்தவருமான குருபரன் ஆருஸ் (வயது - 6) 15

## முல்லை மனிதப் புதைகுழி தொடர்பில் விசாரணை வேண்டும்


### மாவட்டச் செயலகம் முன் கவனயீர்ப்புப் போராட்டம்




03

# மண்டைதீவு ஆலயக் கிணற்றில் 60 இளைஞர்களின் சடலங்கள்

## தோண்டினால் இப்போதும் எடுக்க முடியும் - சிறீதரன்



(கொழும்பு)

மண்டைதீவு தூமையார் ஆலயக் கிணற்றில் 60க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு ஆலயக் கிணற்றில் வீசப்பட் 15

# நாட்டில் 50 வீதமான பாடசாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

நாட்டில் 50 வீதமான பாடசாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2020, 2021ஆம் ஆண்டுகளில் கொரோனா தொற்றின் காரணமாக, 50-60 வீதமான பாடசாலைகளை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இதனால், கற்பித்தல் நடவடிக்கையும் பாதிக்கப்பட்டது. தற்போது க.பொ.த. உயர்தர பரீட்சைக்கான விடைத் 15

# சுற்றுலாப் பயணிகளை அதிகரிக்க நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

நாட்டுக்கு வருடாந்தம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 5 மில்லியனாக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இந்திய சுற்றுலா சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட எல்லைகளை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற மருந்துகள் குறித்து உரிய நடவடிக்கை வேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

தரமற்ற மருந்துகளால் நாட்டில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை பொறுப்புக்கூற வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று இது தொடர்பாக உரையாற்றிய அவர், இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "தரமற்ற மருந்துகளால் எமது நாட்டில் பலர் உயிரிழந்துள்ளார்கள். பேராதனை வைத்தியசாலையில் தரமற்ற மருந்தினால் ஒருவர் உயிரிழந்த நிலையில், நேற்று முன்தினமும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காலி, பொரலுகெட்டிய தெற்கு, கொஸ்கொட பலப்பிட்டிய பகுதியில் வசிக்கும், இமாலி பிரியதர்ஷினி வீரசிங்க என்ற பெண், ஏனஸ் டோல் எனும் பெயர் உடைய ப்ரோபபோல் மருந்தினால் உயிரிழந்துள்ளார்.

நான் சபையில் இரண்டு நாட்களுக்கு முன்னர் ப்ரோபபோல் மருந்து தொடர்பாக எச்சரிக்கை விடுத்திருந்தேன். இவ்வாறான மூன்று வகையான தரமற்ற, சுகாதாரத்திற்கு ஏற்புடைய தல்லாத மருந்துகள் தொடர்பாக நான் கூறியபோது, அவை சிறந்த மருந்துகளாகும் என்று சபையில் வைத்து சுகாதார அமைச்சர் தெரிவித்தார். இப்போது நேற்று முன்தினம் இந்த மருந்தினால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தரமற்ற மருந்துகளுக்கு அரசாங்கம் ஆதரவளிக்கிறதா? தரமற்ற மருந்துகள் தொடர்பாக முறையிட ஒரு இடம் இல்லை. இதுதொடர்பாக ஆராய ஒரு நிறுவனம் இல்லை.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை என்பது, திருடர்களின் கூடாரமாக மாறியுள்ளது. தலைவரும், நிர்வாக அதிகாரியும் இவற்றுக்கு பொறுப்புக்கூறியே ஆகவேண்டும். நேற்று முன்தினம் ஒரு தாய் இறந்துள்ளார். இந்த இறப்புக்கு நஷ்ட ஈடு கொடுப்பதால் மட்டும், அவரது பிள்ளைகளும் கணவரும் சிறப்பாக வாழ்ந்து விடுவார்களா?

எனவே, இதுதொடர்பாக அரசாங்கம் தீவிரமான நடவடிக்கையொன்றை மேற்கொள்ள வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# மண்டைதீவில் நில அபகரிப்பு தடுத்து நிறுத்த அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கிழக்கில் உள்ள சுமார் 18 ஏக்கர் நிலத்தை கடற்படைக்கு சுவீகரிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஏற்பாடாக எதிர்வரும் 12 ஆம் திகதி அளவீட்டு பணிகள் இடம்பெறவுள்ளன.

எனவே இந்த முயற்சியை முறியடிக்கும் வகையில், எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 9 மணியளவில் மண்டைதீவு கிழக்கில் இடம்பெறவுள்ள எதிர்ப்பு போராட்டத்தில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு வேலணை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஆ.ஸ்ரீபத்மராஜா கேட்டுக்கொண்டுள்ளார். (ம)

# வட்டி வீதங்களை குறைக்காத வர்த்தக வங்கிகள் மீது நடவடிக்கை

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டுள்ளதன் படி, வட்டி விகிதத்தை குறைக்காத வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பில் மத்திய வங்கி அவதானித்து வருவதாகவும், அவற்றை கடுமையான விதிமுறைகளுக்கு உட்படுத்த தயாராக இருப்பதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கலால் திணைக்கள தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்கு வருமானம் ஈட்டும் நிறுவனங்கள் மேலும் கூறுகையில், மத்திய வங்கிக்கு அமைவாக வட்டி விகிதங்களைக் குறைப்பதற்கு வர்த்தக வங்கிகள் செயற்பட வேண்டும்.

அரச வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான அறிக்கை எதிர்வரும் 12ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.

அரசாங்கத்திற்கு வருமானம் ஈட்டும் நிறுவனங்களுடன் நீண்ட நேரம் கலந்துரையாடிய பின்னர் இந்த அறிக்கை தயாரிக்கப்படும்.

மக்கள் மீது புதிய வரிச் சுமையை ஏற்படுத்தாத வகையில் வருமான முகாமைத்துவம் தொடர்பான பல முன்மொழிவுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## முல்லை...

கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

தேசிய நல்லிணக்கத்துக்கும், தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் செயற்பாடுகள் தற்போது தீவிரமடைந்துள்ளன.

இலங்கை சிங்கள பௌத்த நாடு. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2000 வருடகால பழமையான தொல்பொருள் மரபுரிமைகள் பரவலாக காணப்படுகின்றன. குருந்தூர் மலையில் பௌத்த மரபுரிமைகள் உள்ளன.

குருந்தூர் மலைக்கு நாங்கள் அண்மையில் சென்றிருந்த போது அவ்விடத்துக்கு வருகை தந்திருந்த முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி நாங்கள் விசாரணைக்கு இடையூறு விளைவிப்பதாக குறிப்பிட்டு எம்மை வெளியேறுமாறு குறிப்பிட்டார்.

அத்துடன் குருந்தூர் விகாரையில் வழிபாட்டில் ஈடுபட வருகை தந்த பௌத்த தேரரையும் வெளியேறுமாறு குறிப்பிட்டார். நீதிபதியின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது.

குருந்தூர் விகாரையின் தொல்பொருள் மரபுரிமை தொடர்பில் கேள்வி எழுப்பும் அதிகாரம் இந்த தமிழ் நீதிபதிக்கு கிடையாது.

அத்துடன் குருந்தூர் மலையில் இருந்து வெளியேறுமாறு குறிப்பிடும் அதிகாரமும் அவருக்கு இல்லை. இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை தமிழ் நீதிபதி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட வகையில் பௌத்த மரபுரிமைகள் அழிக்கப்படுகின்றன. அதற்கு ஒருசில நீதிபதிகளும் ஆதரவு வழங்குகிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி அரசியலமைப்பின் 9 ஆவது அத்தியாயத்தை முழுமையாக மீறியுள்ளார் என்பதையும் உயரிய சபை ஊடாக குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளை அழித்து அதன் மீது திரிசூலம் உட்பட மத அடையாளங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. குருந்தூர் மலையிலும் இவ்வாறான தன்மையே காணப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளை பாதுகாக்க சிங்கள பௌத்த மக்கள் ஒன்றிணைய வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்று குறிப்பிடப்படுகிறது. தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்றால் ஏன் பௌத்த மத மரபுரிமைகளை அழித்து அதன் மீது திரிசூலத்தை அமைக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றார். (ம-7)


கனடா சுற்றுலா விசா

சுற்றுலா விசா மூலம் கனடாவிற்கு மிக குறுகிய காலத்தில் குறைந்த செலவில் செல்வதற்கு எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

சட்டரீதியாக கனடாவில் குடியேறுவதற்கான வாய்ப்பினை நாங்கள் உங்களிற்கு பெற்றுத்தருகிறோம்.

Hybrid International hub (Pvt) Ltd, Jaffna

021 222 1265, 076 250 0098

077 815 5920

(C-6881)



பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- கணக்குப் பதியுநர்கள் (பெண்கள்)

கல்வித் தகைமை க.பொ.த (உயர் தரம்)

வயது – 24 இற்கு மேல்

ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்

பொது முகாமையாளர்

வலம்புரி

தொடர்பு : 076 097 312


# பால் உற்பத்தியை அதிகரிக்க விசேட திட்டம்

## இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத்

(கொழும்பு)

நாட்டு மக்கள் திரவப் பால் உற்பத்தி மற்றும் பாவனையில் ஆர்வம் காட்டுவதாகவும், திரவப் பால் தொழிலை ஊக்குவிப்பதன்மூலம், பால்பண்ணையாளரின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், நாட்டு மக்களின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்யவும் முழந்துள்ளதாக கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் திரவ பால் உற்பத்தியை ஊக்குவிக்க அரசாங்கம் குறிப்பிட்ட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் விவசாய அமைச்சுக்கு பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அந்த நெருக்கடிக்கு முகங்கொடுத்து நாட்டு மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வலுவான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்தார்.

கால்நடைத் துறையில், நாட்டின் பால் மற்றும் புரதத் தேவைகளை முதன்மையாகப் பூர்த்தி செய்வதே எங்கள் நோக்கமாகும் என அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனித புதைகுழி தொடர்பில் துரித விசாரணை வேண்டும்

## முல்லைத்தீவில் போராட்டம்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பாக உரிய விசாரணைகள் இடம்பெற வேண்டும் என வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.**

இதில் காணாமல் போனவரின் உறவினர்கள், முன்னாள் போராளிகள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு இந்த போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு அமைப்பு ஏற்பாடு செய்திருந்த குறித்த போராட்டத்தில் சுமார் 50 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப புதைகுழி தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் பதாகைகளையும் இவர்கள் தாங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-6)







# வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழில் இம்மாதம் 15,16 ஆம் திகதிகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் உள்ளிட்ட பல சேவைகளுக்கான விழிப்புணர்வு செயற்றிட்டமும் கண்காட்சியும் நடைபெறவுள்ளன.

க்ளோகல் 2023 எனும் தொனிப்பொருளில் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் முற்றவெளித் திடலில் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள அல்லது வடமாகாண இளைஞர், யுவதிகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் கற்கைகள், தொழிற் பயிற்சிகள் தொடர்பான சந்தேகங்கள் மற்றும் தேவைகளை நிவர்த்தி செய்ய இந்த க்ளோகல் வழிகாட்டி கண்காட்சியில் பங்குபற்றி தமது வேலைவாய்ப்பு தொடர்பான விளக்கங்களையும், வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

உங்களது சந்தேகங்களையும், தேவைகளையும் பெற்றுக்கொள்ள WWW. GLOCAL.LK என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து பதிவுகளை மேற்கொள்வதுடன், உங்களது கேள்விகளுக்கான அல்லது பிரச்சினைகளுக்கான தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியும் என ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (4-6-101)

# தமிழ் பொலிஸார் இன்மையால் முறைப்பாடு செய்வதில் சிரமம்

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழி பேசும் பொலிஸார் போதிய அளவு இல்லாதமையால் தமது முறைப்பாடுகளை பதிவு செய்வதில் தாமதம் ஏற்படுவதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கு கடமையாற்றும் தமிழ் பொலிஸார் இடமாற்றம் பெற்று செல்லும் போது அந்த இடத்துக்கு கடமையாற்றுவதற்கு போதியளவு பொலிஸார் வருவதில்லை எனவும் அந்த இடத்திற்கு வருபவர்களும் தமிழ் மொழியில் பெரிதும் பேசமாட்டார்கள். இந் நிலையில் தங்களது முறைப்பாடுகளை பதிவு செய்வதில் தாமதம் ஏற்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தமது முறைப்பாடுகளை கூறுவதற்கு தமிழ் மொழியில் பேசும் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-60)

# வவுனியாவில் கரும்புச் செய்கை; பாலைவனமாகும் வன்னி நிலம்

## முன்னாள் வட மாகாணசபை விவசாய அமைச்சர்

(முல்லைத்தீவு)

வவுனியாவில் கரும்புச் செய்கை மேற்கொண்டால் வன்னி நிலம் பாலைவனமாகும் என முன்னாள் வடமாகாண சபை விவசாய அமைச்சர் க.சிவநேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா வடக்கு பிரதேசத்திலே கரும்புச்செய்கை செய்வதற்கு பெருந்தொகையான நிலத்தை வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரம் கொடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

குறிப்பாக வன்னி பிரதேசம் கரும்புச்செய்கை நடவடிக்கைக்கு ஏற்ற நிலம் என்பதில் எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. அத்துடன் கால நிலை அதற்கு சாதகமான சூழ்நிலையாகத்தான் உள்ளது.

பொருளாதார ரீதியிலோ அல்லது இங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஏற்ற வகையில் இந்த கரும்புச் செய்கை நடவடிக்கையில் ஈடுபட முடியுமா என ஆராய வேண்டும். இது ஒரு நீண்ட காலத்திற்கு செய்யக்கூடிய பயிர் என்பது மாத்திரம் அல்ல. ஏற்கனவே பாரம்பரியமாக இந்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் பயிரினங்களை எந்த அளவில் பாதிக்கும் அல்லது உறுதுணையாக இருக்கும் என்பதையும் ஆராய வேண்டும்.

வவுனியா வடக்கு பிரதேசத்தில் 70 வீதமான வனவளம் வனவளத் திணைக்களத்தின்ரின் கட்டுப்பாட்டில் உள்ளது. குறித்த நிலப்பரப்பில் கரும்புச் செய்கையினை செய்யப் போவதாக இருந்தால் 70 ஆயிரம் ஏக்கர் நிலத்தினை சுவீகரிக்க அனுமதியினை வழங்க இருப்பதாக கூறப்படுகிறது. ஏறக்குறைய 45 வீதமான வனவளம் அழிக்கப்படவுள்ளது.

குளங்களை அமைக்காது நிலத்தடி நீரினை, பயன்படுத்தி கரும்புச்செய்கை நடவடிக்கையில் ஈடுபடுவார்களாயின் நிச்சயமாக இந்த வன்னி பிரதேசம் பாலைவனமாகும் என தெரிவித்தார். (4-6)

# தனியார் மருத்துவ நிலையத்தில் நாய்க்கு குருதி பரிசோதனை

## மன்னிப்பு கோரினார் மருத்துவ நிலைய உரிமையாளர்

(குருமன்காடு)

வவுனியாவில் தனியார் மருத்துவ பரிசோதனை நிலையம் ஒன்றில் நாய்க்கு குருதி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதற்கு குறித்த தனியார் மருத்துவ பரிசோதனை நிலைய உரிமையாளர் மன்னிப்பு கோரியுள்ளதாக வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

குறித்த தனியார் மருத்துவ பரிசோதனை நிலையத்தை தனது மருத்துவ நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் நபர் ஒருவர் குறித்த மருத்துவமனையில் நாய்க்கு இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆதாரத்துடன் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் எம்.மகேந்திரன் மற்றும் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆகியோருக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் வடமாகாண சுகதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி வழங்கிய எழுத்து மூல பதிலில்,

குறித்த விடயம் தொடர்பில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த ஆய்வுகூட உரிமையாளர் மன்னிப்பு கோரியுள்ளதுடன், தவறு இனிவரும் காலங்களில் இடம்பெறாது என கடிதம் மூலம் அறிவித்துள்ளார் என தெரிவித்தார். (4-6-250)

# இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த அழுத்தம் கொடுங்கள்

## யாழ். மீனவ அமைப்புகள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

இந்தியா செல்லும் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கு இந்திய மீனவர்களின் எல்லை தாண்டியை மீன் பிடியைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தங்களை வழங்க வேண்டும் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளன உப தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் கோரிக்கை முன்வைத்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கோரிக்கை முன்வைத்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று இந்தியா செல்ல உள்ளார். இவ்வாறு செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்கதையாகியுள்ள இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை நிறுத்துமாறு இந்திய பிரதமருக்கு அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும். அது மட்டுமல்லாது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக ஜனாதிபதிக்கு அழுத்தத்தை வழங்குவதோடு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அழுத்தங்களை வழங்க வேண்டும் என்றார். (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் முதன்முறையாக பிரிவு II இற்கான இறுதிப்போட்டி

# யாழ்.சென்றலைட்ஸ் எதிர் முல்லைத்தீவு பிரன்ஸ் அணி மோதல்





2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை கிரிக்கெட் பிரிவு II தொடரில் வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான தொடரின் (பிரிவு III) இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ்.சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து முல்லைத்தீவு பிரன்ஸ் அணி மோதவுள்ளது.

குறித்த போட்டிகள் வடமாகாண துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் றதீபனின் நெறிப்படுத்தலின் மூலம் வடமாகாண துடுப்பாட்டச் சங்கம் நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# திடீர் ஓய்வை அறிவித்தார் பங்களாதேஷ் கப்டன்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் கப்டன் தமிம் இக்பால் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஐ.சி.சி ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் தொடங்க உள்ள நிலையில், பங்களாதேஷ் ஒருநாள் அணியின் கப்டன் தமிம் இக்பால் ஓய்வு பெறுவதாக திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக பத்திரிகையாளர்களை சந்தித்த அவர் கண்ணீருடன் தனது முடிவினை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "இதுதான் எனக்கான முடிவு. நான் எனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினேன். அதற்காக முயற்சியும் செய்தேன். இந்தத் தருணத்தில் இருந்து நான் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறேன். இந்தப் பயணத்தில் என் மீது நம்பிக்கை வைத்த சக வீரர்கள், பயிற்சியாளர்கள், பங்களாதேஷ் கிரிக்கெட் வாரியம், எனது குடும்பத்தினர் என அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

என் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்த ரசிகர்களுக்கு நன்றி. நீங்கள் தான் எனது ஊக்கம். என் வாழ்வின் அடுத்த அத்தியாயத்தை தொடங்குகிறேன். அதற்கு உங்கள் பிரார்த்தனைகள் வேண்டும்" என தெரிவித்துள்ளார். (4)

# இந்தியாவின் எந்த இடத்திலும் விளையாட தயார்-பாபர் ஆசம்

உலக கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவில் ஒக்டோபர் ஆரம்பமாகவுள்ளது. இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, தென் ஆபிரிக்கா, வங்காளதேசம், நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 அணிகள் பங்கேற்கின்றன.

போட்டிக்கான அட்டவணை சமீபத்தில் வெளியிடப்பட்டது. அகமதாபாத், பெங்களூர், சென்னை, டெல்லி, தர்மசாலா, ஐதராபாத், கொல்கத்தா, லக்னோ, மும்பை, புனே ஆகிய 10 நகரங்களில் போட்டிகள் நடக்கிறது. இதற்கிடையே பாகிஸ்தான் அணி பங்கேற்கும் சில போட்டி இடங்களை மாற்றுமாறு அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் கோரிக்கை விடுத்தது.

ஆனால் பாகிஸ்தானின் கோரிக்கையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நிராகரித்தது. இந்த நிலையில் பாகிஸ்தான் அணி கப்டன் பாபர் ஆசம் அளித்த பேட்டியில் கூறியதாவது,

இந்தியாவில் நடைபெறும் உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் எந்த இடத்திலும் எந்த அணியுடனும் விளையாட பாகிஸ்தான் அணி தயாராக இருக்கிறது.

உலக கிண்ணத்தில் இந்தியாவுக்கு எதிராக விளையாடி வெற்றி பெறுவது பற்றி மட்டும் சிந்திக்கவில்லை. ஒட்டு மொத்த போட்டியிலும் சிறப்பாக செயற்பட வேண்டும்.

ஐ.சி.சி பட்டத்தை வெல்ல வேண்டுமானால் ஒவ்வொரு போட்டியிலும் சிறப்பாக விளையாட வேண்டும். அதில் கவனம் செலுத்துவோம் எனத் தெரிவித்தார். (4)

உலகக் கிண்ண தகுதி சுற்று

# பிளே ஓப்பில் 151 ஓட்டங்கள் விளாசிய அமீரக வீரர்



உலகக்கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டிகளில் 9 ஆவது இடத்திற்கான பிளே ஆஃப் சுற்றில் அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரக அணிகள் மோதி வருகின்றன.

இதில் முதலில் ஆடிய அமீரக அணி 50 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 308 ஓட்டங்கள் குவித்தது.

தொடக்க வீரர் அர்யன்ஸ் ஷர்மா 57 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மற்றொரு தொடக்க வீரர் ஆசிப்கான் அதிரடியாக 145 பந்துகளில் 151 ஓட்டங்கள் குவித்தார். இதில் 6 சிக்ஸர், 12 பவுண்டரிகள் அடங்கும்.

அமெரிக்க அணியின் தரப்பில் அலிகான் 2 விக்கெட்டுகளும் நேட்ரவல்கர் மற்றும் நோஸ்துஷ் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர். (4)

# இருபது-20 போட்டி ரோகித், கோலி நீக்கம்



50 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவில் வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் நவம்பர் 19 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. முதல் போட்டி நவம்பர் 19 ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெற உள்ளது. இதற்கான அட்டவணை சமீபத்தில் வெளியிடப்பட்டது.

அந்த அட்டவணையில் 5 போட்டிகள் சென்னை சேப்பாக்கத்தில் நடக்க உள்ளது. இந்த உலகக்கிண்ண போட்டிக்கு இந்தியாவில் மொத்தம் 10 மைதானங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அதில், அகமதாபாத், சென்னை, பெங்களூரு, தரம்சாலா, டெல்லி, ஹைதராபாத், லக்னோ, கொல்கத்தா, மும்பை, புணே ஆகிய மைதானங்களில் 46 நாட்கள் 48 போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் வாரியம் வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான 5 இருபது-20 ஓட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கப் போகும் இந்திய அணியின் வீரர்களின் பெயர்களை வெளியிட்டது. அந்தப் பெயர் பட்டியலில், ரோஹித்சர்மா, விராட் கோலி பெயர்கள் இடம்பெறவில்லை.

சமீபத்தில் நடந்து முடிந்த ஐ.பி.எல் போட்டியில் நன்றாக விளையாடிய திலக் வர்மா, ரவி பிஷ்னாய், சஞ்சு சாம்சன், யஷஸ்வி ஜேய்ஸ்வால் ஆகியோருக்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்திய அணிக்கு கப்டனாக ஹர்திக் பாண்டியாவும் துணை கப்டனாக சூர்யகுமார் வழி நடத்துவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனை திருப்பி செலுத்த கால அவகாசம் வழங்கிய இந்தியா

(கொழும்பு)

இலங்கை தன்னிடம் பெற்ற கடன்களை மீள செலுத்துவதற்கு 12 வருடகால அவகாசத்தை இந்தியா வழங்கவுள்ளது.

இலங்கையின் கடன்சுமையை குறைப்பதற்காக இலங்கை தன்னிடம் பெற்ற கடன்களை மீள திருப்பி செலுத்துவதற்கு 12 வருடகால அவகாசத்தை வழங்கக்கூடும் என இந்தியாவின் ஏற்றுமதி கடன் உத்தரவாத கூட்டுத்தாபனத்தின் தலைவர் எம். செந்தில்நாதன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்துடனான இலங்கையின் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. அதன் பின்னர் மறுசீரமைப்புத் தொடர்பான திட்டம் வெளியாகும். நாங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எங்கள் பணத்தை மீட்டெடுப்போம் என அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று நான்கு வருடங்களில் இவற்றை பெறவேண்டும். ஆனால் அதனை 10-12 வருடங்களிற்கு நீடிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# கெசோவரி பறவைகளை பார்வையிட வாய்ப்பு

(கொழும்பு)

தாய்லாந்திலிருந்து நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள கெசோவரி பறவைகள் இன்னும் ஒரு மாதத்தின் பின்னர், பொது மக்கள் பார்வையிட சந்தர்ப்பம் வழங்கப்படும் என தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை தெரிவித்துள்ளது. உலகின் இரண்டாவது பெரிய மற்றும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய பறவைக் கூட்டத்தில், 9 மாத மான ஆண் கெசோவரி பறவையொன்றும் இரண்டு பெண் கெசோவரி பறவைகளும் உள்ளதாக தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையின் பிரதிப் பணிப்பாளர் தினுசிக்கா மானவடு தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள குறித்த பறவைகள் தற்போது, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# இலங்கைக்குரிய தொல்பொருட்களை திருப்பி அனுப்புகிறது நெதர்லாந்து

(கொழும்பு)

இலங்கைக்குரிய 6 தொல்பொருட்கள் நெதர்லாந்திலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு ஏப்ரலில் முடிவடைந்த ஒரு கூட்டு சர்வதேச ஆதார ஆராய்ச்சியின் போது நெதர்லாந்தில் இருந்த ஆறு தொல்பொருட்கள் இலங்கையை சேர்ந்தவை என உறுதிப்படுத்தப்பட்டது.

"ஒரு தங்கம் மற்றும் ஒரு வெள்ளி வாள் ,ஒரு தங்கக் கத்தி, இரண்டு துப்பாக்கிகள் மற்றும் பீரங்கிகள் எல்லாமே கண்டிய இராச்சியத்திற்கு சொந்தமானவை" என அமைச்சு தெரிவித்துள்ளது.

நெதர்லாந்திலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ள தொல்பொருட்கள் 1765 ஆம் ஆண்டு கண்டி அரண்மனை முற்றுகையின் போது டச்சு கிழக்கிந்தியக் வர்த்தகக் கம்பனியால் பெறப்பட்ட டச்சு சொத்துக்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



கோப்பாய் பிரதேச தேசோதய சபையினரால் உரும்பிராய் கிழக்கு செல்வபுரம் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட அணிக்கு விளையாட்டுக்குரிய சீருடைகள், மற்றும் விளையாட்டு உபகரணங்களும் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.(படம்-கஜிந்தன்)




# இராசிபலன்

08.07.2023
ஆனி 23, சனிக்கிழமை
பஞ்சமி காலை 6.05 மணிவரை
சஷ்டி பின்னிரவு 3.53 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 2.38 மணிவரை
சுபநேரம் -2.58-4.28 மணிவரை
இராகுகாலம்-8.58-10.28 மணிவரை

சந்திராஷ்டமம்- ஆயிலியம்.

வளவன்

**மேஷம்**: எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்**: மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**துலாம்**: தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்**: நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்,காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்**: தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்,இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்**: புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சொந்தபந்தங்களின் ஒத்துழைப்பால் சிந்தை மகிழ்வீர்கள், கனவு பலதமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்**: வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கும்பம்**: உடல்நலனில் கவனம் தேவை, மறக்முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்கள் வருகையால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம்,மனதிற்கு தெய்வ வழிபாடு மகத்துவம் தரும்.

**கன்னி**: எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், ஆரோக்கியமான நாள்.

**தனுசு**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்**: உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும்.

மனிதன் தன் வாழ்நாளில் ஐந்தில் ஒரு பங்கினை கனவு காண்பதிலேயே கழிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ முகாம்களின் கீழ் பல மனித புதைகுழிகள்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(மன்னார்)

**மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் பஜார் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச் சந்திரா தலைமையில் இடம் பெற்ற குறித்த போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பெற்றோர் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.



போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேண்டும், வேண்டும் சர்வ தேச விசாரணை வேண்டும், எங்கே எங்கே உறவுகள் எங்கே?, வீடுகளில் வைத்து கொண்டு சென்ற உறவுகள் எங்கே?, வெள்ளை வானில் கொண்டு சென்ற பிள்ளைகள் எங்கே?, ஓ.எம்.பியும் வேண டாம், 2 இலட்சமும் வேண் டாம்., சரணடைந்த உறவுகள் எங்கே? உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

இதன்போது கருத்து தெரிவித்த மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவு களை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச் சந்திரா,

தற்போது மனித புதைகுழி கள் கண்டுபிடிக்கப்பட்டு வரு கின்றது. தற்போது முல்லைத் தீவிலும் புதைகுழி கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

இராணுவ முகாம்களை அக ற்றினால் இன்னும் அதிக மனித புதைகுழிகள் கண்டுபிடிக்க முடியும். பிடித்துக் கொண்டு சென்ற பிள்ளைகள் இல்லை என்றால் அவர்கள் தான் கொலை செய்து புதைத்திருக்க வேண்டும்.

இராணுவ முகாம்களில் புதைக்கின்றமையினால் தான் அவர்கள் காணிகளை விடுகி றார்கள் இல்லை. அதனாலேயே சிங்கள மக்களை குடியேற்ற வும் புத்தர் கோவிலை அமைக்க வும் நடவடிக்கைகள் எடுக்கி ன்றனர்.

இதன் காரணமாக மனித புதைகுழிகள் மூடி மறைக்கப் படும். எனவே ஐ.நா கூட்டத்தொட ரில் ஆவது எங்களுக்கு நீதி கிடை க்க வேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-285)

# 'கடலினை வரைபவள்' கவிதை தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

குணாளினி தயாநந்தவின் (கரங்கள்) 'கடலினை வரை பவள்' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலை நூலக கேட்போர் கூடத்தில் கவிஞர் சோ.பத்ம நாதன் தலைமையில் இடம்பெற வுள்ளது. (4)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ்மன்ற சனசமூக நிலையம் நடத்தும் இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கருகம்பனை கலாசார மண்டபத்தில் நடைபெற வுள்ளது. (4)

# வீதியால் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி அபகரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரி விற்குட்பட்ட கண்டுவில் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் வீதி யால் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டதாக சாவகச் சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீதியால் சென்ற பெண்ணு டைய மூன்று பவுண் சங்கி லியை மோட்டார்சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த நபர்கள் அறு த்துக் கொண்டு தப்பித்துச் சென் றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை சாவகச்சேரிப் பொலி ஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (4-6-30)



நெல்லியடி காளியம்மன் முருகப்பெருமான் ஆலய மஹாகும்பாபிஷேகம் கடந்த 5 ஆம் திகதி சிறப்பாக நடை பெற்றது. (படம்:-மகாலிங்கம்)

# சகல சைவ ஆலயங்களிலும் சமய பிரசங்க மரபு தொடர வேண்டும்

## கலாநிதி.ஆறு.திருமுருகன் வேண்டுகோள்



(யாழ்பாணம்)

**சகல சைவ ஆலயங்களிலும் சமயப் பிரசங்க மரபு தொடர வேண்டும் என அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

சகல சைவ ஆலயங்களிலும் திருவிழாக் காலங்களிலும் வெள்ளிக்கிழமைகளிலும் சமய பிரசங்கத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேண வேண்டும். எமது இளம்சிறார்களின் நன்மை கருதியும் ஆலயம் வரும் அடிய வர்களை அறவழிப்படுத்துவதற் கும் இது மிக அத்தியாவசிய மானது. சமய நற்சிந்தனை மற் றும் சைவப் பிரசங்கங்கள் தற்போது ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனை, சமயப் பிரசங்க மரபு அருகி வருவதைக் காண லாம்.

இந்நிலையை மாற்று வதற்கு ஆலய கடமைகளில் ஈடுபடும் சிவாச்சாரியார்கள், ஆலயங்களை நிர்வகிக்கும் அறங்காவலர்கள் உடன் நடவடி க்கை எடுக்க வேண்டும். நல்லை நகர் நாவலர் பெருமான் காலம் தொடக்கம் சைவ ஆலயங்களில் பேணப்பட்டு வந்த பிரசங்க மரபு தற்போது ஒரு சில ஆலயங்க ளில் மட்டும் பேணிப் பாதுகாக் கப்பட்டு வருகின்றன.

ஏனைய ஆலயங்களில் இம் மரபு கைவிடப்பட்டுள்ளது. ஆல யங்களில் நடைபெற்ற புராண இதிகாச சொற்பொழிவுகளும் சமய விளக்கங்களும் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண் டியது ஆலய நிர்வாகிகளின் தலையாய கடமையாகும்.

வெறும் கட்டடங்களாலும் கிரியைகளோடு கூடிய விழாக்க ளால் மட்டும் மக்களிடம் சமய சிந்தனைகளை பரப்ப முடியாது. எனவே இவ்விடயம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இன்றைய சூழலில் எமது இளம் சமூகம் சமய விடய ங்களை நன்முறையில் அறி யாத நிலை தொடர்கிறது. கடவுள் நம்பிக்கை அற்ற ஓர் சமூகம் உருவாகி வருகிறது. அதனால் கொலை, களவு, போதை, தற் கொலை என அவலம் தொடர்கி ன்றன.

சமூகத்தை ஆற்றுப்படுத்த வேண்டிய பிரதான கடமை ஆல யங்களுக்கு உண்டு. ஆலயங் கள் சமூகம் சார்ந்த பணிகளை தம்மால் இயன்றவரை முன்வர வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-6)

# கட்டாக்காலி நாய்களால் அதிகரிக்கும் விபத்துக்கள்

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதிகளில் நாய்களின் தொல்லைகள் அதி கரித்து காணப்படுகின்றன.

புதிய சந்தை பகுதிகளில் நாய்கள் அதிகமாக காணப்படு வதனால் சந்தைக்கு செல்லும் மக்கள் அவதானமாக செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது.

750 வீதிகளில் நாய்கள் தாறுமாறாக திரிவதனால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றது.

நேற்று வியாழக்கிழமை நாய்களினால் நான்கு விபத் துக்கள் நடைபெற்றுள்ளன.

எனவே கட்டாக்காலி நாய் களை பிடிப்பதற்கான நடவடி க்கை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (4-6-60)



யாழ்ப்பாணம் - பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய நவகுண்ட பக்ஷ சம்புரோக்ஷண புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நேற்றுக்காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன், சுஜிந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெருமளவு நீரை உறிஞ்சும் சீனி உற்பத்தி வடக்கிற்கு ஆபத்து

## எச்சரிக்கிறார் ஐங்கரநேசன்

(வவுனியா)

வவுனியாவில் அந்நிய முதலீட்டுடன் பாரிய சீனித் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கும், அதற்குரிய பாரிய கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்கும் அமைச்சரவை அண்மையில் அவசரம் அவசரமாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

அத்தோடு, தொழிற்சாலையின் அமைவிடத்துக்கெனவும் கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்கெனவும் முதற் கட்டமாக 74,100 ஏக்கர்கள் அளவு காணியை விடுவிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தை முன்னெடுத்துள்ள தரப்பு, இது போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கென வாராது வந்த வரப்பிரசாதம் என்று இனிப்பாய்ச் சிலாகித்து வருகிறது.

ஆனால், இதன் உண்மைகள் மிகவும் கசப்பானவை. வடக்கில் சீனித் தொழிற்சாலை இனிப்புத் தடவிய விசம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்தித்திட்டமொன்றை முன்னெடுக்கும்போது திட்டத்தின் பொருத்தப்பாட்டை அறிந்து கொள்ள நீர் அடிச்சுவடு என்ற நீர்த் தேவையே சூழலியற் குறிகாட்டியாக முதலில் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

கரும்பினதும் சீனியினதும் நீர் அடிச்சுவடு மிகவும் உயர்வானது. ஒரு கிலோ கரும்பை உற்பத்தி செய்வதற்கு 210 லீற்றர் தண்ணீரும் ஒரு கிலோ சுத்திகரிக்கப்பட்ட சீனியை உற்பத்தி செய்வதற்கு 1780 லீற்றர் தண்ணீரும் தேவைப்படுகிறது.

கரும்பு வருடம் முழுவதும் நீர் பாய்ச்ச வேண்டிய ஒரு பல்லாண்டுப் பயிருமாகும். இவற்றின் அடிப்படையில் பேராறுகள் எதுவுமே இல்லாத வறண்ட வலயமான வடக்கில் பெருமளவு நீரை விழுங்கும் சீனி உற்பத்தியை முன்னெடுப்பது பேராபத்தாகும்.

நீர்ச்சமநிலையைக் குழப்பி அத்தியாவசிய உணவுப்பயிர்களின் உற்பத்தியிலும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். ஈற்றில் அம்மண்ணைப் பாலையாக்கியும் விடும்.

கரும்பு மிக அதிகளவில் இரசாயன உரங்களையும் பீடைகொல்லி - களைகொல்லி நஞ்சுகளையும் வேண்டி நிற்கும் ஒரு பயிர்.

தொடர்ச்சியாக விவசாய இரசாயனங்களால் குளிப்பாட்டப்படும் மண்ணில் நுண்ணங்கிகள் அழிந்து தொடர்ந்து பயிரிட முடியாதவாறு மண் மலடாகி விடுகிறது.

கந்தளாய்ச் சீனித்தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டிருப்பதற்குக் கரும்பில் இருந்து இனி மேலும் அதிக விளைச்சலைப் பெறமுடியாத அளவுக்கு நிலம் தரம் இழந்ததும் ஒரு காரணம். விவசாய இரசாயனங்கள் நீரோடு கலந்து குடிநீரையும் மாசடையச் செய்கிறது.

வவுனியா ஏற்கனவே சிறுநீரக நோய்களின் ஆபத்து அதிகமாகவுள்ள மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாய இரசாயனங்கள் கலந்த குடிநீரை அருந்தியதால் ஏராளமானோர் சிறுநீரகங்கள் செயலிழந்து அவதிப்படுகின்றனர்.

இந்நிலையில் கரும்புச் செய்கை வவுனியாவின் நிலத்தினதும் மக்களினதும் ஆரோக்கியத்துக்குப் பெருங் கேடாகவே முடியும் என தெரிவித்தார். (4-6)

## தேயிலைக்கான செஸ்வரி அதிகரிப்பு

(கொழும்பு)

ஒவ்வொரு நூறு கிலோ கிராம் தேயிலைக்கான செஸ் வரி 400 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த மாதம் 21 ஆம் திகதி பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரணவினால் வெளியிடப்பட்டுள்ளது.

தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கை தேயிலைச் சபை சட்டத்தின் 13(01)(அ) என்ற உறுப்புரைக்கமைய விதிக்கப்பட்டுள்ள செஸ் வரியாக ஒவ்வொரு நூறு கிலோ கிராமுக்கும் 300 ரூபா அறவிடப்படும் என்ற ஏற்பாடு, ஒவ்வொரு நூறு கிலோ கிராமுக்கும் 400 ரூபா செஸ் வரி அறவிடப்படும் என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

## மசகு எண்ணெய் விலை குறைக்கப்படுமா?

(கொழும்பு)

மசகு எண்ணெய் விலையில் திருத்தத்தை ஏற்படுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் அடுத்த வாரம் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ நேற்று முன்தினம் வியாழக்கிழமை இதனை தெரிவித்துள்ளார்.

அத்தோடு கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளமை மற்றும் வட்டி விகிதங்கள் குறைவினால் மசகு எண்ணெயின் விலையை குறைக்க முடியும் என வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 280 | 200 | 320 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 210 | 240 |
| பச்சைமிளகாய் | 700 | 700 | 650 | 700 |
| தக்காளி | 450 | 420 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 240 | 200 | 300 |
| கோவா | 350 | 300 | 300 | 400 |
| கரட் | 360 | 500 | 500 | 550 |
| பூசணி | 140 | 100 | 100 | 140 |
| புடோல் | 180 | 180 | 180 | 300 |
| வாழைக்காய் | 180 | 200 | 100 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 130 | 160 |
| பாகற்காய் | 600 | 500 | 400 | 800 |
| வெண்டக்காய் | 250 | 280 | 120 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 300 |
| பயற்றங்காய் | 450 | 400 | 300 | 350 |
| லீக்ஸ் | 320 | 320 | 300 | 300 |
| பீற்றூட் | 350 | 350 | 350 | 450 |
| கறிமிளகாய் | 350 | 300 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 400 | 600 |
| போஞ்சி | 550 | 480 | 450 | 550 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 240 | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 400 | 600 |
| முள்ளங்கி | 180 | 140 | 180 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 150 | 200 | -- | 160 |


## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna invite sealed bids from eligible and qualified bidders for the construction work in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Repair works at NTS. | 1500.00 | 153,000.00 | 91 | 3.0 | C8 |
| 2. | Renovation of male section in ward 24. | 1500.00 | 246,000.00 | 91 | 4.9 | C8 |
| 3. | Renovation of female section in ward 24. | 1500.00 | 194,000.00 | 91 | 3.8 | C8 |
| 4. | Roof working for patient waiting area at ward 24, changing Timber Door at Dialysis unit, Casualty Operation Theater. | 1500.00 | 77,000.00 | 91 | 1.5 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 10.07.2023 up to 21.07.2023 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 24.07.2023, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (chairman),**
**Regional Procurement, Committee,**
**Teaching Hospital, Jaffna.**

(சி-6880)



80 ஆவது அகவை தின வாழ்த்து




அகவை எண்பதில் கால் பதிக்கும்
தமிழ் பேராசான்
நாகலிங்கம்
குழந்தைவேலு
(தமிழ்க் குழந்தை)
அவர்களே
மண் கும்பான்
மனற் குன்றனும்
பலவே வாழ்க!
அன்புடன் வாழ்த்தும்,
மாணவர்கள்.
(16218)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 161

## பயம்...எப்பொழுது வரும்..?



ஓர் ஊரில் ஒரு குடியானவன் தன் மனைவி மகனுடன் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். அவனுக்குத் தன் மனைவியின் மேல் கொள்ளைப் பிரியம். அவளை அதிகமாக.நேசித்தான்.

இப்படி சந்தோஷமாக இருக்கும் பொழுது அவன் மனைவியை ஒரு பாம்பு கடிக்க அவள் இறந்து விட்டாள்.

இந்த நிகழ்ச்சியை அந்த மனிதனால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. ஊர் மக்கள், அவன் மனைவியைச் சுடுகாட்டிற்கு கொண்டு சென்று எரிக்க வேண்டும் என்று சொன்னதும் அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் உருண்டு புரண்டு அழுதான்.

அவனைப் பார்க்கவே பாவமாக இருந்தது.

ஆனால் வேறு வழியில்லாமல் அவனைச் சமாதானப்படுத்திச் சுடுகாட்டிற்கு அழைத்துச் சென்று அந்தப் பிணத்தை எரித்தார்கள். அவனால் தாள முடியாமல் சுடுகாட்டிலும் கத்தி அழுதான். சரி இவன் அழுது அழுது தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டால் தான் முழு ஆறுதல் அடைந்த திருப்தி பெறுவான் என்று அவனை அங்கேயே விட்டுவிட்டு ஊர் மக்கள் சென்று விட்டார்கள்.

அவனும் அன்று இரவெல்லாம் அந்தச் சுடுகாட்டில் கத்தி அழுது கொண்டிருந்தான். அவன் அழுது கொண்டிருந்த இடத்தில் ஒரு மரம் இருந்தது. அதில் ஓர் அம்மா பேயும் ஒரு குட்டிப் பேயும் இருந்தன. இந்த மனிதன் கத்தி அழுது கொண்டே இருந்ததால் அந்தக் குட்டிப் பேயிற்கு தூக்கம் வரவில்லை.

அதனால் அது கோபமாகத் தன் தாயிடம் "அம்மா அந்த ஆள் அழுவதால் எனக்குத் தூக்கம் வரவில்லை. நீ போய் அவனை பயமுறுத்தி துரத்திவிட்டு வா" என்று சொன்னது.

அதற்கு அம்மா பேய் "வேண்டாம். அந்த மனிதன் இப்பொழுது அதிக கவலையில் இருக்கிறான். இந்த நேரத்தில் அவன் கவலை மட்டும் தான் அவனுக்குப் பெரியதாகத் தெரியும். இந்த நேரத்தில் நாம் போய் பயமுறுத்தினாலும் அவன் பயப்பட மாட்டான்" என்றது.

இந்தக் கூற்றை குட்டிப்பேய் ஏற்கவில்லை. "எவ்வளவு பெரிய மனிதனானாலும் நிச்சயம் ஒரு பேய்க்கு பயந்து தான் போவான். நான் போய் அவனைத் துரத்துகிறேன்" என்று சொல்லிவிட்டு அவன் எதிரில் வந்து நின்று அவனைப் பயமுறுத்தியது.

அவன் பயப்படவில்லை. அவன் தன் கவலையை நினைத்தே அழுது கொண்டிருந்தான். குட்டிபேய்க்கே சலிப்பு வந்து அவனை விட்டுவிட்டு திரும்பி வந்து பேசாமல் இருந்து விட்டது.இப்பொழுது கொஞ்சக்காலம் ஓடிவிட்டது. இந்தக் குடியானவன் தன் ஊர் மக்கள் சொன்னார்கள் என்று தன் மகனைக் காரணம் காட்டி இன்னொரு பெண்ணை மணந்து கொண்டு புதுப் பெண்ணுடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் வியாபாரத்திற்காக அந்தச் சுடுகாடு தாண்டிப் போக வேண்டியிருந்ததால் அப்பக்கமாகப் போய்க் கொண்டு இருந்தான். அவனை அந்தக் குட்டிபேய் பார்த்துவிட்டு தன் அம்மாவிடம் "தன் வாழ்நாளிலேயே தான் பார்த்த தைரியசாலி இவன் தான்" என்றது.

அதற்கு அம்மா பேய் "அவன் தைரியசாலி கிடையாது. வேண்டுமானால் இப்பொழுது அவன் எதிரில் நீ போய் சும்மா நின்று பார்" என்றது.

குட்டிப்பேயும் உடனே அந்தக் குடியானவன் முன் சும்மா வந்து நின்று சிரித்தது. அந்தக் குட்டிப்பேயைப் பார்த்தது தான் தாமதம். அந்தக் குடியானவன் பயந்து வாய் உலறி நடுங்கிப் போய் தலைதெறிக்க ஓடிப் போனான். குட்டிப்பேய் அம்மாவிடம் வந்து "அன்றைக்கு தான் முழுப் பலங்கொண்டு பயமுறுத்தியும் பயப்படாதவன் இன்று நான் சாதாரணமாக எதிரில் போய் நின்றதும் பயந்து ஓடியது ஏன்?" என்று கேட்டது.

இதற்கு அம்மா பேய், "மனிதன் சந்தோஷமாக இருக்கும் பொழுது தனக்கு ஏதாவது துன்பம் வந்து விடுமோ என்ற பயத்திலேயே வாழ்கிறான். அந்த நேரத்தில் ஒரு சிறிய பயத்தைக் கொடுத்தாலும் அவன் அதிகமாக பயந்து விடுகிறான்.

இதே கவலையான நேரத்தில் அந்தக் கவலையை விட தனக்கு வேறு துன்பம் இல்லை என்று அரட்டுகிறான்.அதனால் மனிதன் அதிக சந்தோஷமாக இருக்கும் பொழுது தான் அவனை மிகச் சாதாரணமாக பயங்கொள்ள வைத்துவிட முடியும்" என்றதாம்.

## தீப்பிடித்து எரிந்தது எக்ஸ்பிரஸ் ரயில்

### உயிர்தப்பிய பயணிகள்

(தெலுங்கானா)

மேற்கு வங்காள மாநிலம் அவுராவில் இருந்து தெலுங்கானா மாநிலம் செகந்திராபாத்திற்கு பலக்னுமா எக்ஸ்பிரஸ் ரயில் புறப்பட்டு சென்றது. நேற்று பகலில் ஐதராபாத் அருகே பொம்மைபள்ளி, பகிடிபள்ளி இடையே ரயில் சென்ற போது திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது.

முதலில் ஒரு பெட்டியில் பிடித்த தீ மற்ற பெட்டிகளுக்கும் பரவத் தொடங்கியது. இதையடுத்து உடனடியாக ரயில் நிறுத்தப்பட்டது. அதில் இருந்த பயணிகள் உடனடியாக கீழே இறக்கி விடப்பட்டனர். இதனால் அதில் இருந்த பயணிகள் அதிர்ஷ்டவசமாக தப்பினார்கள். இந்த ரயில் விபத்துக்கான காரணம் குறித்து ரயில்வே பொலிஸ் விசாரணை நடத்தி வருகிறார்கள். (நி-5)

## மூழ்கும் மணலில் மாட்டிக்கொண்ட தம்பதி அதிரடியாகக் காப்பாற்றிய கால்பந்து வீரர்கள்

(லண்டன்)

பிரித்தானியாவில் மெர்சிசைட் இல் உள்ள குரொஸ்பி கடற்கரையில் மூழ்கும் மணலில் மாட்டிக்கொண்ட தம்பதியை சவுத்பொர்ட் கால்பந்துக் குழு வீரர்கள் காப்பாற்றியுள்ளனர்.

குறிப்பாக தம்பதிக்கு உதவ கால்பந்து வீரர்கள் உடனடியாகச் சென்றனர் என்று கால்பந்துக் குழுவின் சமூக ஊடகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இருவரும் காயங்கள் இன்றி மீட்கப்பட்டதாக மெர்சிசைட் தீயணைப்பு மீட்புக் குழு தெரிவித்தது.

மேலும் பெண்ணை விரைவில் மீட்க முடிந்தது. அந்த ஆண் இடுப்பு வரையில் மாட்டிக் கொண்டிருந்ததால் அவரை மீட்கச் சுமார் 5 நிமிடம் ஆனது என தெரியவந்துள்ளது.

அவரை மீட்கச் சுமார் 4 கால்பந்து வீரர்கள் முயற்சி செய்தனர். (நி-5)

## ஜப்பா...

## சுத்திகரி...

### சீ...

(டோக்கியோ) — நிலநடுக்கம் மற்று... உலைகளை குளிர்... கலக்க கடும் எதிர்ப்பு...

ஜப்பானில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட ச்க்தி வாய்ந்த நிலநடுக்கம் மற்றும் சுனாமி தாக்குதலால் புகுஷிமா அணுமின் நிலையம் சேதம் அடைந்தது. கதிர் வீச்சு கசிவு ஏற்பட்டதுடன், பல ரியாக்டர்கள் நிரந்தரமாக சேதமடைந்தன. அவற்றை மீண்டும் செயற்பாட்டிற்கு கொண்டு வருவது சாத்தியமில்லை என்பதால் அணுமின் நிலையம் மூடப்பட்டது.

## தடை செய்யப்பட்ட ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்க பைடன் யோசனை

(வோஷிங்டன்)



அமெரிக்காவின் நேச நாடுகள் உட்பட பல உலக நாடுகள் தடை செய்துள்ள ஆயுதங்களை உக்ரைனிற்கு வழங்குவது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஆராய்ந்து வருகின்றார்.

உக்ரைனிடம் வெடி பொருட்கள் மிகவும் குறைவாகக் காணப்படுவதால் அந்த நாடு பொதுமக்களிற்கு கடும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய கொத்துக்குண்டுகளை கோரியுள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக அமெரிக்க ஜனாதிபதியும் அவரது சகாக்களும் உக்ரைன் யுத்தம் தொடர்பான மிக முக்கியமான கேள்வியுடன் போராடுகின்றனர்.

ரஷ்யாவுடனான போரில் உக்ரைனிற்கு மிகவும்

## ஓஷன்கேட் நிறுவனத்தின் ஆராய்ச்சிகளும் வர்த்தக செயற்பாடுகளும் நிறுத்தம்

(வோஷிங்டன்)



ஓஷன்கேட் நிறுவனம் அதன் நடவடிக்கைகள் அனைத்தையும் ரத்து செய்திருக்கிறது.

டைட்டன் சுற்றுப்பயணிகளுக்கான நீர்மூழ்கிக் கப்பலை நிறுவிய அந்த நிறுவனம் ரத்து நடவடிக்கை குறித்து அதன் இணையத்தளத்தில் அறிவித்தது.

ஓஷன்கேட் நிறுவனத்தின் ஆராய்ச்சிகள், வர்த்தகச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பிரபல டைட்டானிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ன் அணுமின் நிலைய தண்ணீரை ரித்து கடலில் கலக்க ஐ.நா அனுமதி

## சீனா கடும் எதிர்ப்பு

**றும் சுனாமித் தாக்குதலால் சேதமடைந்த அணு ரிர்விக்க பயன்படுத்தப்பட்ட தண்ணீரை கடலில் ப்புகளுக்கு மத்தியில் ஐ.நா அனுமதியளித்துள்ளது.**



அதேசமயம், அங்குள்ள அணு உலைகளை குளிர்விக்க பயன்படுத்தப்பட்ட தண்ணீரை (கழிவுநீர்) சுத்திகரித்து கடலில் கலக்க ஜப்பான் அரசு முடிவு செய்து அதற்கான அனுமதியை ஐ.நா சபையின் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பிடம் கேட்டது. இதையடுத்து பல கட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டு வந்தன.

இதற்கிடையே ஐ.நாவின் அணுசக்தி அமைப்பின் தலைவர் ரபேல் மரியானோ க்ரோசி ஜப்பானுக்கு சென்றார். அவர் சுனாமியால் சிதைந்த புகுஷிமா அணுமின் நிலையத்தை பார்வையிட்டார்.

பின்னர் அவர் கூறும் போது, "சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை பசுபிக் பெருங்கடலில் கலப்பதற்கான திட்டங்களில் திருப்தி அடைந்தேன்" என்றார்.

இதையடுத்து சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை கடலில் திறந்து விட ஐ.நாஅனுமதியை ஜப்பான் பெற்றுள்ளது.

அதேவேளையில் இத்திட்டத்துக்கு சீனா கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்த அணுமின் நிலையத்திலிருந்து ஒரு மில்லியன் தொன்னுக்கும் அதிகமான கழிவு நீரை சுத்திகரித்து பசுபிக் பெருங் கடலில் திறந்து விட வேண்டி உள்ளது. இந்த செயல்முறையை முடிக்க 30 முதல் 40 ஆண்டுகள் வரை ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-5)

அவசிய தேவையாகவுள்ள ஆட்டிலறி வெடிபொருட்கள் முற்றிலும் தீர்ந்து போவதற்கு அனுமதிப்பதா அல்லது கொத்துக்குண்டுகளை வழங்குவதா என்பதே இந்த கேள்வி.

தடைசெய்யப்பட்ட இந்த ஆயுதம் பொதுமக்களிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. குறிப்பாக சிறுவர்களிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

தடை செய்யப்பட்ட கொத்துக்குண்டுகளை அமெரிக்கா வழங்கினால் அவரது நெருங்கிய சகாக்கள் பலரிடமிருந்து அவரை தனிமைப்படுத்தலாம்.

அமெரிக்காவின் நட்பு நாடுகள் பல கொத்துக்குண்டுகளை பயன்படுத்துவது, சேமிப்பது, ஏனைய நாடுகளிற்கு வழங்குவதை தடை செய்யும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

சொகுசுக் கப்பல் மூழ்கியிருந்த பகுதிக்குச் சென்று அதன் சிதைவுகளைக் காணும் சுற்றுப் பயணத்துக்கு டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் பயன்படுத்தப்பட்டது.

கப்பலை இயக்கிய ஓஷன்கேட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதி காரி ஸ்டோக்டன் ரஷ்ஷும் உட்பட ஐவர் கடந்த மாதம் உயிரிழந்தனர்.

அந்தக் கப்பல் கடல் பயணத்திற்குத் தகுந்த கலனா என்பதை உறுதி செய்ய விசாரணை நடைபெறுகிறது.

மேலும் விதிமுறைகளற்ற அத்தகைய பயணங்களின் தன்மையைப் பற்றியும் கேள்விகள் எழுந்துள்ளன. (நி-5)

## பிரான்ஸில் தொடரும் போராட்டம்

# முகமூடி அணிந்து போராட்டக்காரர்களை தாக்கும் இராணுவத்தால் பரபரப்பு

(பாரிஸ்)

பிரான்ஸில் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்பாக பரபரப்பை ஏற்படுத்தும் புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

கடந்த புதன்கிழமை பிரான்ஸிலுள்ள நான்டர் என்னுமிடத்தில், போக்குவரத்து விதிகளை மீறியதாக, நஹல் என்னும் 17 வயது இளைஞரே இவ்வாறு பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த சம்பவம் பிரான்ஸில் தற்போது உருவாகியுள்ள வன்முறைக்கு வழிவகுத்துள்ளது. உயிரிழந்த இளைஞருக்கு ஆதரவாக தெருக்களில் இறங்கிய போராட்டக்காரர்கள் கடைகளை சேதப்படுத்துவது, தீவைப்பு போன்ற செயல்களில் இறங்க, பல்லாயிரக்கணக்கான பொலிஸார் நாடெங்கும் குவிக்கப்பட்டனர்.

நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். என்றாலும் நாட்டின் பல்வேறு நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் இன்று வரை தொடர்கின்றன.

வன்முறையைக் கட்டுப்படுத்த பொலிஸார் முயன்று கொண்டிருக்கும்போது, மர்ம நபர்கள் சிலர் அவர்களுக்கு உதவியதாக் வெளியாகிய தகவல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக லொரியண்ட் என்னும் நகரில், தொப்பியும் முகமூடியும் அணிந்த ஒரு கூட்டம் போராட்டக்காரர்களை கடுமையாக தாக்கியுள்ளது.



இதற்கமைய குறித்த முகமூடி கூட்டம் இராணுவத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் என தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், லொரியண்ட நகரில் ஆர்ப்பாட்டங்கள் நடக்கும் போது இந்த இராணுவ தளத்திலுள்ள வீரர்கள் சிலர், முகத்தை மறைத்துக் கொண்டு போராட்டக்காரர்களை தாக்கியதாக பிரான்ஸ் நாட்டு உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-5)

## இத்தாலியின் முதியோர் இல்லத்தில் தீ

# 6 முதியவர்கள் உயிரிழப்பு

(ரோம்)

இத்தாலியின் மிலான் நகரில் உள்ள முதியோர் இல்லத்தில் நேற்று அதிகாலை மூண்ட தீச் சம்பவத்தில் 6 பேர் மாண்டதாக அந்நாட்டுத் தீயணைப்பாளர்கள் தெரிவித்தனர்.

தீயணைப்பாளர்கள் கட்டடத்திலிருந்து பலரைக் காப்பாற்றியதாகத் தீயணைப்புத் துறை அதன் டுவிட்டர் தளத்தில் பதிவிட்டது.

புகையைச் சுவாசித்த பல முதியவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

அந்த முதியோர் இல்லத்தில் 210 முதியவர்கள் வசித்து வந்தனர்.

மாண்டவர்களில் ஐவர் 69 இற்கும் 87 இற்கும் இடைப்பட்ட வயதுடைய முதியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாநாயகர் மகிந்த யாப்பாவிற்கு எதிராக

# பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்திற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடிதம்

(கொழும்பு)


சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் செயற்பாடுகள் தொடர்பாக எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சியின் 34 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகரின் பக்கசார்பான செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பிலான பிரேரணையை நிறைவேற்றும் போது, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துகளை வெளியிடுவதற்கிருந்த வாய்ப்புகளை சபாநாயகர் தடுத்ததாக அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் இரவு 9.30 வரை விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் இரவு 7.30 அளவில் வாக்கெடுப்பை நடத்துவதற்கு சபாநாயகர் மேற்கொண்ட தீர்மானத்தினால் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தற்போதைய சபாநாயகர் இதற்கு முன்னரும் பாராளுமன்றத்தில் இவ்வாறு செயற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-5)

# கட்டுப்பாட்டை மீறிய முட்டை விலை

(கொழும்பு)

கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும் உள்ளூர் முட்டைகள் அதிக விலைக்கு விற்பனை செய்வதை நிறுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளை முட்டைக்கு 44 ரூபாவும் சிவப்பு முட்டைக்கு 48 ரூபாவும் கட்டுப்பாட்டு விலையை விதிக்க வர்த்தக அமைச்சு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

எவ்வாறாயினும், நேற்று முன்தினம் வரை சில கடைகளில் முட்டை 60 ரூபாவுக்கும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குறிப்பிட்டுள்ளனர்.

முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை விதித்ததையடுத்து, நுகர்வோர் விவகார அதிகாரசபை தொடர்ச்சியான சோதனைகளை மேற்கொண்டால், சந்தையில் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு, இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், மீண்டும் உள்ளூர்ச் சந்தைக்கு முட்டைகளை வெளியிட மொத்த வியாபாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை பேக்கரிகளுக்கு மாத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தையில் மீண்டும் முட்டைகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை உள்ளூர் சந்தைக்கு வெளியிட நடவடிக்கை எடுத்தால், உள்ளூர் முட்டைகள் இவ்வளவு அதிக விலைக்கு விற்கப்படாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)



அராலி இந்துக் கல்லூரியின் பிரதான நுழைவாயில் திறப்புவிழா கல்லூரியின் அதிபர் பாலசுந்தரம் பாலகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நுழைவாயிலானது கல்லூரியின் 1993ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண மாணவர்களது நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-கஜிந்தன்)

# பாதாளக் குழுக்களின் அட்டகாசம் அதிகரிப்பு கட்டுப்படுத்த அதிரடிப்படையினர் களமிறக்கம்

(கொழும்பு)

இலங்கையின் தென் மாகாணத்தில் பாதாளக் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் தினந்தோறும் அவர்களுக்குள் மோதல்கள் மற்றும் கொலை சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றன.

எனவே இவர்களைக் கட்டுப்படுத்தி கொலையாளிகளைக் கைது செய்வதற்காகப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் களத்தில் இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அதிரடிப்படையினருக்கு பயந்து தென் மாகாணத்தைச் சேர்ந்த அதிகமான பாதாளக் குழுவினர் கொழும்புக்கு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2871

உமா




லக்ஸ்மன்




மிலா




கோபால்




லக்ஷனா




சது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் இறந்தமைக்கான ஆதாரங்கள் பாதுகாப்பு அமைச்சில் உள்ளதாம்

## பாதுகாப்பு கருதி வெளிவிடப்படவில்லை என்கிறார் பிரமித பண்டார தென்னக்கோன்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்து விட்டார் என்பது உறுதி. அதனை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் பாதுகாப்பு அமைச்சிடம் உள்ளன.

பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டே குறித்த ஆதாரங்கள் வெளியிடப்படாமலுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

அத்தோடு, தற்போது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காக சில குழுக்கள் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறான குழுக்கள் தொடர்பில் பாதுகாப்புத் துறை மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்து விட்டார் என்பது உறுதியாகும். அவருடன் மிக நெருக்கமாக



செயற்பட்ட கருணா அம்மான், தயா மாஸ்டர் உள்ளிட்டவர்கள் இதற்கு சாட்சி.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் உரிய தகவல்கள் உள்ளன.

எனவே இது தொடர்பில் மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருக்க தேவையில்லை. அதனை விட முக்கியத்துவம் செலுத்த வேண்டிய பல்வேறு காரணிகள் உள்ளன என அவர் தெரிவித்தார். (நி)

# கிராம உத்தியோகத்தர்கள் சமாதான நீதவான்களாக அறிவிப்பு

(கொழும்பு)

அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் நிரந்தர மற்றும் செயற்றிறனுடன் சேவையாற்றும் அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் சமாதான நீதவான்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவின் கையொப்பத்துடன், இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளது. (நி-5)

# ஜனாதிபதி இந்தியா விஜயம்

(கொழும்பு)

எதிர்வரும் வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவிடமிருந்து பெறப்பட்ட அழைப்பின் பிரகாரம் இந்தப் பயணம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த விஜயத்தில் பிரதமர் உட்பட பல இராஜதந்திர அதி



காரிகள் கலந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# சந்திரிகா மீண்டும் சு.கவில் இணைய வேண்டும்

## இதுவே எமது விருப்பம் என்கிறார் தயாசிறி

(கொழும்பு)

சர்வகட்சி அரசாங்கமொன்று நாட்டில் அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் இருப்பதாக அக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பல அர்ப்பணிப்புக்களை செய்துள்ளார்.

அவர் அன்று தனது அதிகாரத்தின் ஊடாகத்தான் மகிந்த ராஜபக்ஷவை வேட்பாளராக களமிறக்கிய காரணத்தினால் தான், அவர் நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

மைத்திரிபால சிறிசேனவையும் அவர்தான் வேட்பாளராக களமிறக்குமாறு தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து முன்னெடுத்த அந்த தேர்தல் செயற்பாடுகளுக்கும் அவர் தலைமை தாங்கினார்.

அவர் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ள வேண்டும் என்பது தான் எமது விருப்பமாக உள்ளது.

அவர் கட்சிக்கு வந்தால் மீண்டும் எமது கட்சி பலமடையும் என்றே நாம் கருதுகிறோம். எவ்வாறாயினும், இது தொடர்பான இறுதிமுடிவை அவர்தான் எடுக்க வேண்டும்.

அதேநேரம், எமது கட்சியின் தலைவர், ஆரம்பத்திலிருந்தே சர்வகட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்று தான் வலியுறுத்தி வருகிறார்.

சர்வகட்சி அரசாங்கம் என்றால், ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஒன்று, இரண்டு உறுப்பினர்களை இணைத்துக் கொண்டு ஆட்சி செய்வதல்ல.

தேசிய அரசாங்கத்திற்கும் சர்வகட்சி அரசாங்கத்திற்கும் இடையிலும் வித்தியாசம் உள்ளது.

தற்போதும் சுதந்திரக் கட்சியானது சர்வகட்சி அரசாங்கமொன்று அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் உள்ளது" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# போதைப்பொருள் கடத்தலை தடுக்க இந்தியாவுடன் இணைந்து தீவிர கண்காணிப்பு

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச கடலில் இடம் பெறும் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்த இந்தியாவுடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றில் இதுதொடர்பாக நேற்று கருத்து வெளியிட்ட பிரதமர், போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக கடுமையான சட்டங்களை கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரமாக முன்னெடுத்து வருகிறது.

இது தொடர்பாக பல தடவைகள் பாதுகாப்புச் சபையிலும் கலந்தாலோசிக்கப்பட்டன.



சர்வதேச கடல் மார்க்கத்தை கண்காணிக்க இந்தியாவின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஏனெனில், போதைப் பொருள் என்பது இந்தியாவிற்கும் பாரிய அச்சுறுத்தலாகவே இருந்து வருகிறது. எம்முடன் இந்தியா தகவல்களையும் பரிமாறிக் கொண்டு வருகிறது.

பாதுகாப்புத் துறையினர், போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்த நவீன கருவிகளின் ஊடாக தகவல்களை சேகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் தான், உலகின் இன்று இரண்டாவது மிகப்பெரிய வர்த்தகமாக இருக்கிறது.

இதனைக் கட்டுப்படுத்த எமது பாதுகாப்புத் துறையினர் இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

கல்விக் கூடங்கள் அதிகமாகக் காணப்படும் நகரங்களின், போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளமை தொடர்பாக அரசாங்கம் தற்போது அவதானம் செலுத்தியுள்ளது.

இதற்கு எதிரான கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள, சட்டங்களின் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் நாம் தீர்மானித்துள்ளோம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# கச்சா எண்ணெய் உற்பத்தி குறைக்கப்பட்டால் ஏழை நாடுகளுக்கு பேராபத்து

## ஷெல் நிறுவன தலைவர் எச்சரிக்கை

(ஜெனிவா)

கச்சா எண்ணெய் உற்பத்தி குறைக்கப்பட்டால், அது உலக அளவில் விலைவாசி உயர்வை அதிகரிக்கச் செய்து, ஏழை நாடுகளுக்கு மிக அதிக பாதிப்பு ஏற்படும் என பெற்றோலிய பொருட்கள் உற்பத்தியில் முன்னணியில் உள்ள ஷெல் நிறுவனத்தின் தலைவர் வாயல் சாவன் தெரிவித்துள்ளார்.

கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தியில் புதிய முதலீடுகளை செய்வது அறமற்ற, பைத்தியக்காரத்தனமான செயல் என்று ஐ.நா சபையின் தலைவர் அன்டோனியோ குட்டரெஸ் சமீபத்தில் கூறிய கருத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புவி வெப்பமயமாதலை தடுக்க பசுமை வாயுக்களை அதிகம் வெளியேற்றும் நிலக்கரி, பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களின் பயன்பாட்டை குறைத்து, சூரிய சக்தி, காற்றாலை மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று விஞ்ஞானிகளும் செயற்பாட்டாளர்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

தற்போது மொத்த எரிபொருள் நுகர்வில், கச்சா எண்ணெயின் பங்கு 31.2 சதவீதமாகவும் நிலக்கரியின் பங்கு 27.2 சதவீதமாகவும் அணு சக்தியின் பங்கு 4.3 சதவீதமாகவும் பசுமை எரிசக்தியின் பங்கு 12.6 சதவீதமாகவும் உள்ளன.

2030 வரை கச்சா எண்ணெய் உற்பத்தி அளவை, தற்போதைய அளவில் தொடர ஷெல் முடிவு செய்துள்ளதற்கு பருவநிலை விஞ்ஞானிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கச்சா எண்ணெய் உற்பத்தி குறைக்கப்பட்டால், அது உலக அளவில் விலைவாசி உயர்வை அதிகரிக்கச் செய்து, ஏழை நாடுகளுக்கு அதிகளவான பாதிப்பினை ஏற்படுத்தும் என்று வாயல் சாவன் சுட்டிகாட்டியுள்ளார். (நி-5)


# வருட இறுதியில் உயர்தரப் பரீட்சை

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் இந்த ஆண்டின் இறுதியில் நடைபெறுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

மேலும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் 2024 இன் முதல் காலாண்டில் இடம்பெறுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## பாகம் - 1

காவியத் தொடர் 224





ஆயிரம் பதினாயிரம் பட்டுப் பூச்சிகள் அவன் முன்னால் இறகுகளை அடித்துக் கொண்டு பறந்தன. ஆயிரம் பதினாயிரம் குயில்கள் ஒன்று சேர்ந்து இன்னிசை பாடின. மலை, மலையான வண்ண மலர்க் குவியல்கள் அவன் மீது விழுந்து நாலா பக்கமும் சிதறின.

இந்த நிலையில் வந்தியத்தேவன் தலை நிமிர்ந்து குந்தவை தேவியைப் பார்த்தான். என்னவெல்லாமோ சொல்ல வேணும் என்று அவனுடைய உள்ளம் பொங்கியது. ஆனால் அதைச் சொல்லும் சக்தி உயிரற்ற வெறும் வார்த்தைகளுக்கு ஏது?

சொல்ல வேண்டியதையெல்லாம் அவனுடைய கண்களே சொல்லின. அச்சமயம் வந்தியத்தேவனுடைய கண்கள் புனைந்துரைத்த கவிதைகளுக்கிணையான காதற் கவிதைகளைக் காளிதாஸனும் புனைந்ததில்லை, 'முத்தொள்ளாயிரம்' இயற்றிய பழந்தமிழ்க் கவிஞர்களும் இயற்றியதில்லையென்றால் வேறு என்ன சொல்ல வேண்டும்?

வசந்த மண்டபத்துக்கு வெளியில் எங்கேயோ சற்று தூரத்தில் காய்ந்த இலைச் சருகுகள் சலசலவென்று சப்தித்தன. ஈசான சிவபட்டர் தம் குரலைக் கனைத்துக் கொண்டார்.

வந்தியத்தேவன் இந்த உலகத்துக்கு வந்து சேர்ந்தான்!

### ஐம்பதாம் அத்தியாயம்
### பராந்தகர் ஆதுரசாலை

மறுநாள் காலையில் சூரிய பகவான் உதயமாகி உலகத்தை ஒளிமயமாகச் செய்து கொண்டிருந்தார். சூரியனுடைய செங்கிரணங்கள் பழையாறை அரண்மனைகளின் பொற்கலசங்களின் மீது விழுந்து தகதகா மயமாய்ச் செய்து கொண்டிருந்தன. குந்தவைப் பிராட்டியின் மாளிகை முன்றலில் அம்பாரி வைத்து அலங்கரித்த மாபெரும் யானை ஒன்று வந்து நின்றது. குந்தவையும் வானதியும் மாளிகையின் உள்ளேயிருந்து வெளி வந்து மேடைப் படிகளின் மீது ஏறி யானையின் மேல் ஏறிக் கொண்டார்கள். படை வீடுகளுக்கு நடுவில் இருந்த பராந்தக சோழர் ஆதுர சாலையை நோக்கி யானைப் பூமி அதிரும்படி நடந்து சென்றது. யானைப் பாகன் அதனருகில் நடந்து, அதன் நடை வேகத்தைக் குறைத்து அழைத்துச் சென்றான். யானையின் மணி ஓசையைக் கேட்டு நகர மாந்தர் தத்தம் வீடுகளுக்குள்ளேயிருந்து விரைந்து வெளி வந்து பார்த்தார்கள். பெண்ணரசிகள் இருவரையும் கண்டதும் அவர்கள் முகமலர்ந்து கைகூப்பி நின்று முகமன் செலுத்தினார்கள்.

மற்ற வீதிகளைக் கடந்து, யானை, படை வீடுகள் இருந்த நகரத்தின் பகுதியை அடைந்தது. அந்த வீதிகளின் தோற்றமே ஒரு தனி மாதிரியாகத்தான் இருந்தது. கொழுத்த சேவற் கோழிகள் ஒன்றையொன்று சண்டைக்காகத் தேடிக் கொண்டு சென்றன.

வளைந்து சுருண்ட கொம்புகளையுடைய ஆட்டுக் கடாக்கள் "போருக்கு வருவோர் யாரேனும் உண்டோ?" என்ற பாவனையுடன் அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டு நின்றன. ரோஸம் மிகுந்த வேட்டை நாய்களைத் தோல் வாரினாலும் மணிக் கயிறுகளினாலும் வீட்டு வாசல் தூண்களில் பிணைத்திருந்தார்கள்.

சின்னஞ்சிறு பிள்ளைகள் கைகளில் மூங்கில் கழி பிடித்து ஒருவரோடொருவர் சிலம்பம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சிலம்பக் கழிகள் மோதிக் கொண்ட போது, 'சடசடா படபடா' என்ற ஓசைகள் எழுந்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நன்றி கெட்ட சிங்கம்

(நேற்றைய தொடர்ச்சி...)



அப்போது அவ்வழியாக ஒரு நரி வந்தது. "இதனிடம் நியாயம் கேட்போம்" என்று கூறிய மனி தன் நடந்த கதையனைத்தையும் நரியிடம் கூறினான். "எங்கள் தொழில் அனைவரையும் அடித்துக் கொன்று சாப்பிடுவதுதான்.

இது இவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் கூட என்னைக் கூண்டிலிருந்து விடுவித்தான். முட்டாள்த்தனமான இந்தச் செய்கைக்கு உரிய பலனை இவன் அனுபவித்தே தீர வேண்டும். நீ என்ன சொல்ற நரியாரே.." என்றது.

அனைத்தையும் கேட்ட நரிக்கு சிங்கத்தின் நன்றி கெட்ட செயல் புரிந்து விட்டது. உதவி செய்த மனிதனைக் காப்பாற்றி சிங்கத்தை கூண்டில் பூட்டி விட தந்திரமாகச் செயற்பட்டது.

அதனால் ஒன்றும் புரியாததைப் போல் பாவனை செய்து "நீங்கள் இந்த மாதிரி சொன்னால் எனக்கு ஒன்றுமே புரியல. ஆரம்பத்திலிருந்து சொல்லுங்கள்" என்றது நரி. உடனே சிங்கம் சொல்லத் தொடங்கியது. "நான் அந்தக் கூண்டிற்குள் அடைந்து கிடந்தேன்..."

"எந்தக் கூண்டிற்குள்?" என்றது நரி "அதோ இருக்கிறதே அந்தக் கூண்டிற்குள்" என்றது சிங்கம். "எப்படி அடைந்து கிடந்தீர்கள்?" என்றது நரி. சிங்கம் விடுவிடுவென்று கூண்டிற்குள் சென்றது.

இதுதான் சமயம் என்று கருதிய நரி சட்டென்று கூண்டுக் கதவை இழுத்து மூடியது. "நரியாரே! இது என்ன அயோக்கியத்தனம்! நியாயம் கூறுவதாகக் கூறி என்னை மறுபடியும் கூண்டில் அடைத்து விட்டீரே!" என்று கத்தியது சிங்கம்.

"நீங்கள் பேசாமல் கூண்டிற்குள்ளேயே இருங்கள். நான் ஒன்றும் இந்த மனிதனைப் போல் முட்டாள் அல்ல. உங்களுக்குச் சாதகமாக நியாயம் சொன்னால் முதலில் மனிதனை அடித்துக் கொல்வீர்கள்.

பிறகு என்னையே அடித்துக் கொன்று விடுவீர்கள். அதனால்த்தான் உங்களைக் கூண்டிற்குள் செல்லுமாறு செய்து கதவைப் பூட்டி விட்டேன்" என்றது நரி. நன்றி மறந்த சிங்கம், தான் செய்த தவறை எண்ணி வருந்தியது.

நீதி: ஒருவர் செய்த உதவியை எப்போதும் மறக்கக் கூடாது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய செயல்கள் நம்மைத் துன்புறுத்துவது, அவற்றைச் செய்த காலத்தில் அன்று. வெகுகாலம் சென்று அது ஞாபகத்திற்கு வரும்போதுதான். – ரூஸோ


வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk


# மனிதப் புதைகுழிகளை இனங்காணுங்கள்

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் நீர்க் குழாய்களை புதைப்பதற்காக மண் அகழ்ந்த போது, மனித எச்சங்கள் கிடைக்கப் பெற்றன.

இதையடுத்து பொலிஸார் நீதிமன்றத்துக்கு மேற்படி சம்பவத்தைப் பாரப்படுத்தியபோது, நேற்று முன்தினம் 6ஆம் திகதி குறித்த மனிதப் புதைகுழி இருக்கும் இடத்தைத் தோண்டுவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன் பிரகாரம் குறித்த இடத்தை அகழ்வு செய்தபோது, அங்கிருந்து மனித எலும்புகள் மற்றும் ஆடைகள் என்பன மீட்கப்பட்டன.

அதேநேரம் சம்பவ இடத்தில் முல்லைத் தீவு.மாவட்ட நீதிபதியும் பிரசன்னமாகியிருந்தார்.

எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பிலான பகுப்பாய்வுகள் செய்யப்பட்ட பின்னரே மீட்கப்பட்ட மனித எச்சங்கள் குறித்த விபரங்கள் தெரியவரும்.

இஃது ஒருபுறமிருக்க, 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தத்தின் போது, உயிரிழந்தவர்களின் உடல்கள் ஆங்காங்கே புதைக்கப்பட்டன.

அதேபோன்று போரின் உச்சக் கட்டத்தில், வீரச்சாவடைந்த போராளிகளின் உடல்களும் அவ்வாறு புதைக்கப்படுவதற்கான சூழ்நிலைகள் இருந்தன.

எனினும் இவ்விதம் புதைக்கப்பட்ட உடல்களை மீள எடுத்து அவற்றை உரியவாறு தகனம் செய்வதற்கும் அடக்கம் செய்வதற்கும் எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

உண்மையில் வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் அவர்கள் இறந்த இடத்திலேயே உறவினர்களால் புதைக்கப்பட்டன.

இவ்வாறு உயிரிழந்தவர்களைப் புதைத்து விட்டு, அந்த இடத்தில் இருந்து நகரவேண்டிய கட்டாயம் இருந்தது.

ஆக, வன்னிப் போரில் உயிரிழந்தவர்களை எங்கு புதைத்தோம் என்பது உறவினர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்.

அதேபோன்று போரில் வீரச்சாவடைந்த போராளிகளின் உடல்கள் புதைக்கப்பட்ட இடங்களை அவர்களுடன் இருந்தவர்களின் உதவியுடன் இனங்காண முடியும்.

எனவே வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புப் போரில் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் எங்கு புதைக்கப்பட்டன என்பதை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும் முல்லைத்தீவு நீதிபரிபாலனமும் இது விடயத்தில் நடவடிக்கை எடுக்கும்போது, ஆங்காங்கே புதைக்கப்பட்டவர்களின் உடல்களை மீள எடுத்து அவரவர் சமய வழிபாடுகளுடன் அவற்றை அடக்கம் செய்யலாம்.

அதேநேரம் உயிரிழந்தவர்களை இனங்காண்பதற்கும் இது உதவியாக இருக்கும்.

இதை நாம் செய்யாமல் விடுவோமாயின், அது காணாமல்போன நம் உறவுகள் தொடர்பில் ஆட்சியாளர்களும் படைத்தரப்பும் தப்பிப் பிழைப்பதற்கு வழி வகுக்கும்.

# பொதுக்கடன்களின் ஸ்திரத்தன்மைக்கு கடன் மறுசீரமைப்பு அவசியமாகும்

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால்

(கொழும்பு)

பொதுக்கடன்களின்ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கடன்மறுசீரமைப்பு அவசியம் என்ற உண்மை நிரூபணமானதாலேயே அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் கடந்த வாரம் முன்மொழியப்பட்டுள்ள உள்ளகக் கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டம் தொடர்பில் பல்வேறு கேள்விகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையிலேயே மத்திய வங்கியின் ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உள்ளகக் கடன் மறுசீரமைப்பு செயற்திட்டத்தைப் பொறுத்தமட்டில், தாம் உள்ளகக்கடன்வழங்குனர்களையும், சர்வதேச கடன்வழங்குனர்களையும் சமத்துவமான முறையில் கையாள்வதற்கு முயற்சித்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள ஆளுநர் நந்தலால் வீரசிங்க, அதனை முன்னிறுத்தியே வங்கித்துறை உள்ளிட்ட நிதியியல் துறையினருக்கு 30 - 36 சதவீதம் எனும் உயர்வான வரி வீதம் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஊழியர் சேமலாப நிதியம் போன்ற நிதியங்களைப் பொறுத்தமட்டில், அவற்றின் அங்கத்தவர்களின் எதிர்கால நன்மைகளைக் குறுகிய காலத்துக்கு மட்டுப்படுத்தக்கூடிய வகையிலும் கடன்மறுசீரமைப்பின் சுமை அந்நிதிய அங்கத்தவர்களிடையே சமமான முறையில் பகிரப்படக் கூடியவகையிலுமான உள்ளகக் கடன்மறுசீரமைப்பு செயற்றிட்டத்தைத் தாம் முன்மொழிந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்றுநடுபொருளாதார நெருக்கடிக்கும், உயர் பணவீக்க நிலைமைக்கும் முகங்கொடுத்திருக்கும் வேளையில் வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களில் உள்ள பணவைப்பு, நிதியங்களில் உள்ள சேமிப்பு போன்ற நிதிச்சொத்துக்களின் உண்மையான பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சியினால் மக்கள் பாதிக்கப்படக்கூடும் என்று சுட்டிக்காட்டியுள்ள ஆளுநர், இருப்பினும் இது குறித்தவொரு சொத்துக்கோ அல்லது நிதியத்துக்கோ மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்றும் விளக்கமளித்துள்ளார்.

மேலும், தொடக்கத்தில் உள்ளகக் கடன்மறுசீரமைப்பை மேற்கொள்ளாமல், சர்வதேச கடன்மறுசீரமைப்பின் ஊடாக மாத்திரமே பொதுக்கடன்களின் உறுதிப்பாட்டை அடைந்துகொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இருப்பினும் பொதுக்கடன் உறுதிப்பாட்டுக்கு உள்ளகக் கடன் மறுசீரமைப்பு அவசியம் என்ற உண்மை நிரூபணமானதால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# தேர்தலை நடத்த பணமில்லாத அரசு பங்குகளை வாங்க முயல்கின்றது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

தேர்தலை நடத்த பணமில்லாத அரசாங்கம், தனியார் நிறுவனத்தின் 5 பில்லியன் பங்குகளை வாங்க முயல்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,தேர்தலை நடத்துவதற்கு 10 பில்லியன் ரூபா நிதி இல்லை என்று கூறும் அரசாங்கம்,

அரசுக்குச் சொந்தமான பல்வேறு முயற்சியாண்மைகளை தனியார்மயமாக்கத் தயாராகி வரும் நேரத்தில்,தனியார் நிறுவனமொன்றின் 5 பில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளை அரசாங்கத்துடன் தொடர்பான நிதி நிறுவனம் கொள்வனவு செய்வது பிரச்சினைக்குரிய விடயம், தேர்தலுக்குக் கூட நிதியில்லாத அரசாங்கம், யாரோ ஒருவருக்குக் கமிசன்பெற்றுக்கொடுப்பதற்காக இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கிறதா அல்லது இது மற்றுமொரு பிணைமுறி மோசடியா என சந்தேகம் எழுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் துணை நிறுவனமான பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனம், First Capital Holdings கம்பனியின் 33 சதவீத பங்குகளை ஜனசக்தி நிறுவனத் திடமிருந்து 5 பில்லியன் ரூபாவிற்கு கொள்வனவு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாக அண்மையில் கொழும்பு பங்குச் சந்தை அறிவிப்பு விடுத்துள்ளதாகவும்,133 மில்லியன் பங்குகள் ஒரு பங்கு 37 ரூபா 10 சதத்திற்கு கொள்வனவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

# மன்னாரில் உழவு இயந்திரத்தினை வழிமறித்து கொடூரத் தாக்குதல்

## பெண்கள் உட்பட மூவர் படுகாயம்

(மன்னார்)

மன்னார் - யாழ்ப்பாணம் வீதியில் வெள்ளாங்குளம் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் உழவு இயந்திரத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்தவர்கள் மீது ஒரு குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் இரு பெண்கள் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உழவு இயந்திரம் பயணித்த வீதியில் தடைகளை ஏற்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வெள்ளாங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களே காயமடைந்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ்.பிரதேசத்தில்** அண்ணாமலையார் ஸ்ரீ ராகவேந்திரா என்ரபிறைசஸ்எவர் கிறீன் அச்சகம், ஹரிகணன் பிறைவேட் லிமிரட் அரசடிவீதி சீனியர் வீதி சந்தி, ஐயனார் கோவிலடி, மனோகரா நாவலர்வீதி, மாவடி, தட்டாதெரு கே.கே.எஸ். வீதி அரசடிசந்தி, சங்கானை, சங்கானை சந்தை, நிச்சாமம் 55ம் பிரிவு இராணுவ முகாம் கட்டைக்காடு, தாளையாடி ஐஸ்தொழிற்சாலை, J.K.W. S.S.P. Site Office தாளையாடி, ஆழியவளை, கட்டைகாடு, கட்டைகாடு இராணுவமுகாம் (55ம்பிரிவு), கேவில் முள்ளியான், மருதங்கேணி (தாளையடி), நாவலடி சந்திமருதங்கேணி, உடுத்துறை, வத்திராயன், வெற்றி லைக்கேணி, வெற்றிலைக்கேணி முள்ளியான் இராணுவமுகாம், முள்ளியான், வெற்றிலைக்கேணி கடற் படைமுகாம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** பொறியியல்பீடம், அறிவியல்நகர் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** சமயபுரம்-வரன் அரிசி ஆலை மணிபுரம், மணிபுரம் வீட்டுத் திட்டம், மருக்காரம்பளை (அபிராமிநகர்), சமயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# போலி நாணயத்தாள்களுடன் இருவர் மன்னாரில் கைது

(மன்னார்)

மன்னாரில்ஒரு தொகை போலி நாணயத்தாள்களுடன் இரண்டு இளைஞர்கள் நேற்று முன்தினம் மாலை மன்னார்வைத்திய சாலை பிரதான வீதியில் வைத்து விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 500 ரூபாய் போலி நாணயத்தாள்கள்15, ஆயிரம் ரூபாய் போலிதாள்கள் 12, ஐயாயிரம் ரூபாய் போலி தாள்கள் 09 மீட்கப்பட்டுள்ளது. இவர்களிடம் இருந்து 64,500 ரூபாய் பெறுமதியான போலி நாணயத்தாள்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மன்னார் பகுதியைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களுடன் கைப்பற்றப்பட்ட போலி நாணயத்தாள்களும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

12

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



**குடநாகன் (கிபி 195-196)**

குடநாகன், குட்டநாகன் அல்லது குஞ்சநாகன் எனப் பலவாறாக அறியப்பட்டவன். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட மன்னன். இவன் ஒரு ஆண்டு மட்டுமே ஆட்சி செய்ததாக மகாவம்சம் கூறுகிறது. ஆனாலும், இவனது ஆட்சிக் காலம் கிபி 181-182என்றும் கிபி 193-195 என்றும் கிபி 186-187 என்றும் பலவாறாகக் கூறப்படுகிறது. இவனது தமையனான குச்சநாகன் என்பவனைக் கொன்று விட்டு இவன் அநுராதபுரத்தின் ஆட்சியில் அமர்ந்தான்.

நாட்டின் படைத் தலைவனாக இருந்த குடநாகனின் மனைவியின் சகோதரன் சிரிநாகன் என்பவன், அரசனுக்கு எதிராகத் திரும்பித் தனக்கு ஆதரவான வலுவான படையுடன் வந்து அநுராதபுரத்தைக் கைப்பற்றிக் குடநாகனை அகற்றி விட்டுத் தானே அரசனானான்.

**முதலாம் சிறிநாகன் (கிபி 196-215)**

முதலாம் சிறிநாகன், இரண்டாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை ஆண்ட மன்னன் ஆவான். இவன் அநுராதபுரத்தை 196 இல் இருந்து 215 வரை ஆட்சி செய்தான். இவனது மைத்துனன் குடநாகன் எனும் அரசனை வெற்றி கொண்டு ஆட்சி பீடம்ஏறினான். இவனின் பின் இவனது மகன் வோகாரிக்கதீசன் ஆட்சிபீடம் ஏறினான்.

**வோகாரிக்கதீசன் (கி.பி. 215 - 236)**

வோகாரிக்கதீசன் (215 - 236) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர் வம்சத்துள் பத்தாமானவன். இவனது தந்தையான முதலாம் சிறிநாகன் (196 - 215) முதலாம் லம்பகர்ண அரசர் வம்சத்துள் ஒன்பதாமானவன். இவன் சட்டவியலை (வோகாரிக்கவியல்) நன்கு பயின்றதனால் வோகாரிக்கதீசன் என்றழைக்கப்பட்டான். இவனது ஆட்சியில் இலங்கையில் மகாயான பௌத்தம் நுழையத் தொடங்கியது. அதற்கு முன்பே அங்கு தேரவாத பௌத்தம் இருந்ததனால் அதைச் சேர்ந்த இவன் தன் அமைச்சரான கபிலன் என்பவனைக் கொண்டு மகாயான பௌத்தம் இலங்கையில் பரவுவதைத் தடுத்தான்.

**அபயநாகன் (கி.பி 237 - 244)**

அபயநாகன் (237 - 244) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர் வம்சத்துள் பதினொன்றாமானவன். இவனது அண்ணனான வோகாரிக்கதீசன் (215 - 237) என்ற பத்தாம் அரசனின் ராணியுடன் கூடா ஒழுக்கத்தை கொண்ட இவன் அது அறியப்பட்டவுடன் தமிழகத்துக்கு ஓடிவிட்டான். சில காலத்துக்குப் பிறகு தமிழக அரசர்களுடன் பெரும்படை நடத்திச் சென்று வோகாரிக்கதீசனைக் கொன்று இலங்கையை கைப்பற்றினான். அவனது அண்ணன் மனைவியையே இராணியாகவும் ஆக்கிக் கொண்டான்.

**இரண்டாம் சிறிநாகன் ( கி.பி. 244 - 246)**

இரண்டாம் சிறிநாகன் (244 - 246) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர் வம்சத்துள் பன்னிரெண்டாமானவன். இவனது தந்தையான அபயநாகன் (237 - 244) லம்பகர்ண அரசர்களுள் 11 ஆம் அரசனாவான். இவனுக்குப் பிறகு இவனுடைய மகனான விசயகுமாரன் ( 246 - 247) இலங்கையை அரசாண்டான்.

**விசயகுமாரன் (கி.பி. 246 - 247)**

விசயகுமாரன் ( 246 - 247) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர் வம்சத்துள் பதின்மூன்றாமானவன். இவனது தந்தையான இரண்டாம் சிறிநாகன் (244 - 246) லம்பகர்ண அரசர்களுள் 12 ஆம் அரசனாவான். இவனது ஆட்சியில் இவனுக்கு அமைச்சராக மூன்று பேர் இருந்தனர். அவர்கள் லம்பகர்ண வம்சத்தவராயினும் அரச குடும்பத்தில் பிறக்காதவர்கள். அவர்களே அதன் பிறகு இலங்கையை ஆண்டனர். அவர்களின் பட்டியல் பின்வருமாறு, முதலாம் சங்கதீசன்-(கி.பி. 247-251), சிறிகங்கபோதி-(கி.பி. 251-253), கோதாபயன்-(கி.பி. 254-267).

**முதலாம் சங்கதீசன் (கி.பி. 247 - 251)**

முதலாம் சங்கதீசன் (247 - 251) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர்களுள் பதினாலாமானவன். முதலாம் லம்பகர்ண அரசர்களுள் பதின்மூன்றாமானவனான விசயகுமாரன் (246 - 247) ஆட்சியின் போது இருந்த தலைமை அமைச்சர்களுள் முதலாமானவன்.

**சிறிசங்கபோதி (கி.பி. 251 - 253)**

சிறிசங்கபோதி (251 - 253) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர்களுள் பதினைந்தாமானவன். முதலாம் லம்பகர்ண அரசர்களுள் பதின்மூன்றாமானவனான விசயகுமாரன் (246 - 247) ஆட்சியின் போது இருந்த தலைமை அமைச்சர்களுள் இரண்டாமானவன்.

**கோதாபயன் (கி.பி. 253 - 266)**

கோதாபயன் அல்லது மேகவண்ணாபயன் (253 - 266) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர்களுள் பதினாறாமானவன். முதலாம் லம்பகர்ண அரசர்களுள் பதின்மூன்றாமானவனான விசயகுமாரன் (246 - 247) ஆட்சியின் போது இருந்த தலைமை அமைச்சர்களுள் மூன்றாமானவன்.

சங்கமித்ரர் என்பவர் மகாயான பௌத்தம் என்ற பௌத்த மதப் பிரிவின் சோழ நாட்டுத் தலைவராவார். இலங்கையைச் சேர்ந்த மகாயான பௌத்த பிக்குகள் இலங்கையிலிருந்து தேரவாத பௌத்த பிரிவைச் சேர்ந்த பிக்குகளால் கோதாபயன் காலத்தில் நாடு கடத்தப்பட்டனர். இதை கண்டிப்பதற்காகவும் இலங்கையில் மகாயான பௌத்தத்தை பரப்புவதற்காகவும் சங்கமித்ரர் கோதாபயன் அரண்மனைக்குச் சென்று அங்கிருந்த தேரவாத பௌத்த பிக்குகளிடம் சமயவாதம் செய்து வென்றார். அந்தப் பிக்குகளையும் கோதாபயன் மற்றும் அவன் இருமகன்களையும் மகாயான பௌத்தத்தைத் தழுவச் செய்தார். அதன் பிறகு கோதாபயனின் முதல் மகனான சேட்டதீசன் இலங்கைக்கு அரசனானான்.

**முதலாம் சேட்டதீசன் (கி.பி.266 - 276)**

முதலாம் சேட்டதீசன் (கி.பி. 266 - 276) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர்களுள் பதினேழாமானவன். முதலாம் லம்பகர்ண அரசர்களுள் பதின்மூன்றாமானவனான விசயகுமாரன் (246 - 247) ஆட்சியின் போது இருந்த தலைமை அமைச்சர்களுள் மூன்றாமானவனான இருந்த கோதாபயன் என்பவனே இவனது தந்தையாவான்.

**மகாசேனன் (கி.பி. 276 - 303)**

மகாசேனன் ( 276 - 303) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர்களுள் பதினெட்டாவது அரசன். கோதாபயன் இவனது தந்தையாவான். மகாசேனனின் மூத்தவனான முதலாம் சேட்டதீசன் (266-276) லம்பகர்ணர்களுள் பதினேழாமானவன். இந்த சகோதரர்கள் இருவரும் சங்கமித்ரர் என்ற சோழநாட்டு மகாயான பௌத்தம் என்ற பௌத்தப் பிரிவு மதத் தலைவரின் சீடர்களாவர். ஆனால் மகாசேனனோ தன் அண்ணன் போல் அல்லாமல் சங்கமித்ரர் மகாயான பௌத்தத்தை இலங்கையில் பரப்புவதற்கு பேருதவிகளை செய்தான். சங்கமித்ரர் கையாலேயே இவனுக்கு முடிசூட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவன் காலத்தில் தேரவாத மற்றும் மகாயான பௌத்த பிரிவினர்களிடையே மதப்பூசல்கள் இருந்தன. மேலும் மகாசேனன் இலங்கையில் அக்காலத்தில் இருந்த சைவக் கோயில்களை இடித்து அழித்திருக்கிறான்.

**சிறிமேகவண்ணன் (கி.பி. 303 - 331)**

மகாசேனனின் மகனான சிறிமேகவண்ணன் (303 - 331) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர்களுள் பத்தொன்பதாவது அரசன். இவன் இலங்கையின் பழைய மதமான தேரவாத பௌத்தத்தை ஆதரித்தான். பல விகாரைகளையும் பிரிவேனாக்களையும் கட்டிய இவன் கலிங்க நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட புத்தரின் பல்தாதுவை அநுராதபுரத்தில் வைத்துச் சிறப்பித்தான். இவன் காலத்தில் இந்தியப் பேரரசனான சந்திரகுப்தருக்கு தூதனுப்பி இலங்கையிலிருந்து புத்தகயாவிற்கு யாத்திரை செய்யும் புத்த பிக்குகளுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு வேண்டினான். இவனுக்குப் பிறகு இவன் தம்பியான இரண்டாம் சேட்டதீசன் (331 - 340) ஆண்டான்.

**இரண்டாம் சேட்டதீசன் (கி.பி. 331- 340)**

சிறிமேகவண்ணனின் சகோதரனான இரண்டாம் சேட்டதீசன் (331-340) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர்களுள் இருபதாமானவன். இவன் யானைத் தந்தத்தில் கலைப் பொருட்கள் செய்வதில் வல்லவனா கமட்டும் இருந்திலமல் அதை மற்றவர்களுக்கு கற்றும் கொடுத்தான். இவனுக்குப் பிறகு இவன் மகனான புத்ததாச லம்பகர்ணன் (341- 370) ஆண்டான்.

**புத்ததாச லம்பகர்ணன் (கி.பி. 340- 369)**

புத்ததாச லம்பகர்ணன் (கி.பி. 340- 369) என்பவன் இலங்கையை ஆண்ட முதலாம் லம்பகர்ண அரசர்களுள் இருபத்தொன்றாமனவன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதங்கேணி...

என்பவராவார்.

லண்டனில் உள்ள அவர்கள், உற வினர் ஒருவரின் மரணச் சடங்குக்காக வடமராட்சிக் கிழக்கிற்கு வந்திருந்த போது மேற்படி சிறுவன் கடலில் குளிக்கச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் அலையில் இழுத்துச் செல்லப்பட்ட சிறுவனை மீட்டு மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

சடலம் பிரேத பரிசோதனைக்காகவும் மரண விசாரணைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## நாட்டை விட்டு...

னோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கான விமானங்களை முன்பதிவு செய்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் 3 இலட்சம் பேர் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் புள்ளிவிவரங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டவை மாத்திரமே எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழ். - சென்னை...

விக்கையில்,

கடந்த சில மாதங்களில் வாரத்திற்கு நான்கு முறை மட்டுமே இயக்கப்பட்ட சென்னை யாழ்ப்பாண விமான சேவை, வரும் ஜுலை 16 முதல் நாள் தோறும் இயக்கப்படும் என்று தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையே பல தசாப்தங்களாக இயங்காமல் இருந்த கப்பல் சேவையை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு வலுவான சகோதர உறவு என்றும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான புவியியல் நெருக்கம் பற்றி அனைவரும் நன்கு அறிந்துள்ளதாகவும் இந்தியத் தூதுவர் தெரிவித்தார்.

இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் பணம் செலுத்துவதற்கு தங்கள் சொந்த நாணயத்தைப் பயன்படுத்த முடியும் என்பதால், இலங்கையில் இந்திய நாணயத்தைப் பயன்படுத்துவது சுற்றுலா துறையை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கு இடையே டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இது வாழ்க்கையை மாற்றுவது மட்டுமல்லாமல் எல்லைகளைத் தாண்டிய பொதுவான பாரம்பரியத்தை உருவாக்கும் என்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தெரிவித்தார். (ம-7)

## சுற்றுலாப்...

கடந்து வாழ்வை மாற்றும் என்ற நிகழ்ச்சி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, BIMSTEC வலயத்தை எல்லைகளுக்கு அப்பால் அபிவிருத்தியடைந்த சுற்றுலாப் பிரதேசமாக மேம்படுத்த அனைத்து BIMSTEC நாடுகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

புதிய திட்டங்கள் இலங்கையை கவர்ச்சிகரமான சுற்றுலாத் ஸ்தலமாக மாற்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது இலங்கைக்கு வருடாந்தம் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர் என்றும் அதை 5 மில்லியனாக உயர்த்துவதற்கு திட்டமிட வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஒரு சுற்றுலா பயணி ஒரு இரவுக்கு 1000 டொலர்களை செலவழிக்க ஒரு கவர்ச்சிகரமான திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-7)

## மண்டைதீவு...

டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அண்மையில் கொக்குத்தொடுவாயில் பல பெண் போராளிகளின் உடல்கள் எனக் கூறப்படும் பல மனித எச்சங்கள் மீட்கப்பட்டன.

எமது நாட்டில் எங்கு தோண்டினாலும் எலும்புக் கூடுகளே இன்று மீட்கப்படுகின்றன.

இந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் தமிழ்ப் போராளிகளின் உடல்கள் எடுப்பதுபோல மண்டைதீவு தூமையார் ஆலயக் கிணற்றையும் துப்புரவு செய்தால் சுமார் 60க்கும் மேற்பட்ட இளைஞர்களின் உடல்களை தோண்டி எடுக்க முடியும்.

இதன் காரணமாகவே இலங்கை இராணுவத்தினர் அந்த இடத்தில் உள்ள மக்களின் காணிகளைப் பறித்து வைத்திருக்கின்றனர்.

சில காணிகளை விடுவிக்காமலும் இருக்கின்றனர். மண்டைதீவில் சதாசிவம் செந்தில்மணி, வைரவநாதன் மகேஸ்வரி உள்ளிட்ட பலரின் காணிகளை இராணுவத்தினர் பலவந்தமாக பிடித்து வைத்திருக்கின்றனர்.

இதனால் குறித்த காணிகளுக்குச் சொந்தக்காரர்கள் இலங்கையின் பல பிரதேசங்களில் அகதிகளாக வாழ்கிறார்கள்.

நல்லிணக்கம் குறித்து அதிகம் பேசும் அரசாங்கம், சமாதானம் பேசும் அரசாங்கம் தொடர்ந்தும் அப்பாவி மக்களது காணிகளை அபகரிக்க நினைப்பது மிக மோசமான செயற்பாடுகளாகும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## நாட்...

செய்து வருகிறோம்.

இந்தச் செயற்பாடு நிறைவடைந்த வுடன், க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வருட இறுதிக்குள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கும் நாம் தீர்மானித்துள்ளோம் என்றார். (ம-7)

## மருந்...

தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

சுகாதாரத் துறையில் எழுந்துள்ள மருந்துகள் கொள்முதல் செயல்முறை குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நிதியமைச்சின் செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினர் இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சுகாதாரத்துறையின் பல முக்கிய விடயங்கள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

சுகாதார துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து ஊடகங்களில் வெளியாகும் தகவல்களின் உண்மைத்தன்மை மற்றும் பொய்யான தகவல்கள் தொடர்பில் துரிதமாக கண்டறியுமாறும் இதன்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)


தன நிதானய
திகதி - 2023.07.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1198
Q 20 21 50 69
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.07.07 | சீட்டிழுப்பு இலக்கம் 3410
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
N 04 45 48 78
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 07/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1516
J 08 03 41 59 67

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 477
கும்பம் 04 08 30 41 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/07
சீட்டிழுப்பு இலக்கம் 5168
L 3 0 5 3 2 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2142 | வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.07.07 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 14 17 31 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,739,236.40
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 20 44 64 70 Z
DLB

சனிதா
திகதி 2023.07.07 | வெற்றி வாரம் 4303 | வர்ணம் செம்மஞ்சள்
12 14 43 63 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,216,608.00
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 09 31 42 64 X
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 346
சீட்டிழுப்பு திகதி 2023.07.07
பச்சை
வெற்றி இலக்கங்கள் 22 36 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,106,240/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3854 | வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.07 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 12 21 50 57 | சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,451,002/-
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 45 49 55 62

கப்ருக
திகதி 07.07.2023 | வெற்றி வாரம் 1318 | வர்ணம் ஊதா
D 14 38 45 63 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 414,068,834.20
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 19 34 37 65 T
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 1968
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2023.07.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 55,631,790/-
வெற்றி இலக்கங்கள் 31 36 56 57 N
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 15 25 30 72 J


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**VILLAGE HOTEL JAFFNA EXPRESS**

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16033)

T.P:077 544 8503



**IELTS - New Batch** ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI (16215)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.



**விற்பனையாளர் தேவை**

எமது புடைவைக் கடைக்கு புடைவை வியாபாரம் பழகிய, பழக ஆர்வம் உள்ள பெண் பணியாளர்கள் தேவை.
(மதிய உணவு வழங்கப்படும்)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**சென்னை சில்க்ஸ்** (16217)
63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.



**Clerk தேவை**

யாழ்.நகரில் இயங்கும் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக உதவியாளர் (பெண்) தேவை. (16224)

077 459 8440


# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14 - 06 - 1938

மறைவு
03 - 07 - 2018

## அமரர் திரு.சுப்பையா நாகேந்திரன்

ஆண்டுகள் ஐந்து ஆனாலும் ஆறாது எம் துயரம்
கண்முனனே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
நீங்காது உம் நினைவு எம் நெஞ்சில்போல்
மண்விட்டு நீங்கி விண் ஏகினாலும்
எம் கண் விட்டு மறையாமல்
நெஞ்சில் கொலுவாக உறைந்திருப்பீர்
உங்கள் ஆன்மா ஆறுதலடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இல.12, அம்மன் வீதி,
கந்தர்மடம். (16220)

குடும்பத்தினர்


**தேவை**

கணக்காளர், சிட்டை எழுதுநர்,
விற்பனையாளர் ஆண், பெண்
இருபாலாரும் அனுபவமுள்ள,
அனுபவமற்றவர்களும்
தொடர்பு கொள்ளவும். (16226)

021 222 5343



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378,
076 097 3127



**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- சுன்னாகம் – சாவகச்சேரி அரச தனியார் பேரூந்துகள் செல்லும் வீதி
- பிரதான காபற் வீதி முகப்புடன் மூன்று இலட்சம் ரூபாய் 300,000/= பின் துண்டு காணிகள் ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் 150,000/=
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16217)

076 826 0354
076 057 0354


# கண்ணீர் காணிக்கை



தோற்றம்
08 - 06 - 1947

மறைவு
04 - 07 - 2023

## அமரர் கு.வி.பஞ்சலிங்கதுரை

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டவரும் முன்னாள் மக்கள் வங்கி மேலதிகாரியும் சமூகப் பற்றாளரும், கொடை வள்ளலும், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தின் செயற்பாட்டின் முக்கியஸ்தரும், பிரித்தானியா புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் பெரியபுலத்தானை குலதெய்வமாக போற்றுபவரும் கிராமப் பற்றாளருமான

**உயர்திரு. கு.வி.பஞ்சலிங்கதுரை**

அவர்கள் தனது பிறந்த மண்ணில் 04.07.2023 ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பூதவுடல் 09.07.2023 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30-11.30 மணிவரையும் புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய வளாகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது அதனைத் தொடர்ந்து பூதவுடல் பிரித்தானியாவுக்கு எடுத்துச் செல்லப்படும்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கு புங்குடுதீவு கலைப்பெருமன்றம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**புங்குடுதீவு கனடா கலைப்பெருமன்ற நிர்வாகத்தினர்**
**அம்பலவாணர் கலையரங்கம் புங்குடுதீவு**


**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 24 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- நவக்கிரி மாணிக்க பிள்ளையார் கோயில் வீதியில்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- 3 வருடங்கள் பூர்த்தி அடைந்த தென்னைகள் உள்ளன.
- நிலாவரை வற்றாக்கிணற்றில் இருந்து 1 km தூரம்
- 1 பரப்பின் விலை 1200000 (பன்னிரண்டு இலட்சம்)

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு: ஜெயம் (16223)

077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.